லஞ்ச ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-6 இதழ்-8 ஜனவரி-2018 மாதஇதழ் விலை ₹ 10/-

makkalvisaranai@facebook twitter



விரைவில்...

# சமூகத்தின்
# நிழல் முகம்

முனைவர் ஆ.மவுரியன்



## தலையங்கம்

அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்

# திருத்தப்பட வேண்டியவர்கள் வேட்பாளர்களல்ல, வாக்காளர்கள்தான்!

ஆளும் கட்சியினர் பொதுவாக தங்கள் அதிகார பலத்தை பயன்படுத்தி இந்த அறுவடையை அமோகமாக நடத்துவது வழக்கம். இம்முறை ஆளும் கட்சியையும் மீறி, சுயேச்சை வேட்பாளர் நடத்திய பண அரசியலுக்கு நல்ல பலன் கிடைத்துள்ளது. ஆர்.கே.நகரில் எப்போது தேர்தல் நடந்தாலும் நாம்தான் வேட்பாளர் என்பது உறுதியாகிவிட்ட சூழலில், வாக்காளர்களுக்கு வலைவீசும் முயற்சிகள் தொடர்ந்து அங்கு நடந்தன. தேர்தல் அறிவிப்பு வெளியானவுடன் அவரது தகுதிக்கேற்ப 6 ஆயிரம், 4 ஆயிரம் எனகட்டுக்கட்டாக பணத்தை அள்ளி வீசினர்.

தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாக நடக்கும் இடைத்தேர்தல்கள் அனைத்துமே கேலிகூத் தாகவே நடந்து முடிந்திருக் கிறது.

ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் அதன் உச்சக்கட்டம். இடைத்தேர்தல் என்றாலே தமிழகத்தை பொறுத்தவரை எடைத்தேர்தல் என்றாகிவிட்டது. ஆளும் கட்சியினரின் பண மதிப்பை, செல்வாக்கை எடைபோடும் தேர்தல் என்றே அர்த்தம் கொள்ளப்படுகிறது. தொகுதியில் எவ்வளவுக்கு எவ்வளவு பணம் விதைக்கப்படுகிறதோ, அந்த அளவுக்கு ஓட்டுகள் அறுவடையாகிவிடும்.

வாக்காளர்களுக்கு பணத்தை வாரி வழங்க இவர்கள் ரூம் போட்டு யோசித்ததன் விளைவு புதிய ஹவாலா முறையை உருவாக்கினர். ரூ. 20 நோட்டுகளை வரிசையான எண்கள் படி வாக்காளர்களுக்கு வழங்கி 'ஹவாலா' அடிப்படையில் விலை பேசியபோது அனைத்து அரசியல் கட்சிகளும் அதிர்ச்சியுற்றன.

வாக்கு விற்பனையை ஆர்.கே.நகரில் அதிமுகவும், தினகரனும் ஒருவரையொருவர் மிஞ்சும் வகையில் நடத்தி காட்டினர். இதை தட்டிக் கேட்க வேண்டிய தேர்தல் ஆணையம் இறுதி வரை கைகட்டி வேடிக்கை பார்த்தது. அதிமுக மற்றும் தினகரனின் உச்சக்கட்ட பண விநியோகம் வெளிப்படையாக தெரிந்தாலும் நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணையத்திற்கு தெம்பில்லை.

பண விநியோகம் குறித்து திமுக ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்த நிலையில், கோர்ட் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தும் தேர்தல் ஆணையம் எவ்வித நடவடிக்கைக்கும் முன்வரவில்லை. ஆர்.கே.நகரில் பணம் கொடுக்கப்படும் இடம், தொகை மதிப்பு ஆகியவற்றை புள்ளிவிபரமாக புகார் தெரிவித்தும் எந்த அதிகாரியும் சம்பவ இடம் சென்று விசாரணை நடத்த தயாராக இல்லை.

ஆர்.கே.நகரில் நடந்த தேர்தல், இந்திய தேர்தல் ஆணையத்தின் இமாலய தோல்வி என திமுக செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்திருப்பது முற்றிலும் சரியாகும். பணத்தை விநியோகித்தவர் மீது வழக்கு, விசாரணை, கைது, தண்டனை என தேர்தல் ஆணையம் சில நடவடிக்கைகளில் உறுதியாக இருந்திருந்தால் பணநாயகம் வீழ்ந்திருக்கும்.

தமிழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் கூட இடைத் தேர்தல் என்றால் ஒதுங்கிக் கொள்வது மரபாக உள்ளது. இது ஏன் என சிந்தித்தால் தேர்தல் ஆணையத்திற்கு தெளிவு பிறக்கும். தேர்தலுக்கு தேர்தல் வாக்காளர்களின் விலை ஏறி கொண்டே போவது ஜனநாயகத்திற்கு ஆபத்தாகவே முடியும். தேர்தல் ஆணையம் தனக்குத்தானே சுய பரிசோதனை செய்து கொண்டால் மட்டுமே வருங்காலத்தில் பணபேரம் ஒழியும். நியாயமான தேர்தல்களுக்கு முன்னுரை எழுதப்படும். எனவே திருத்தப்பட வேண்டியவர்கள் வேட்பாளர்ளல்ல, வாக்காளர்கள்தான்!

- ஆசிரியர்





# தேர்தல் சொல்லும் பாடம்

## குஜராத் முதல் ஆர்.கே.நகர் வரை

மோடியின் பலம், அவருடைய படைக் கலத்தின் பலவீனத்தை மட்டுமல்ல, 'குஜராத் மாதிரி' என்று நாட்டையே நம்ப வைத்த அவருடைய சாதனையும் எப்படிப்பட்டது என்பதை மக்கள் காட்டிவிட்டார்கள். அதேசமயம், நாட்டின் பிற பகுதிகளுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும்கூட இதன்மூலம் அரசியல் செய்தியொன்றைச் சொல்லியிருக்கிறார்கள்; காங்கிரஸ் அதை எப்படிப் புரிந்துகொண்டு செயல்படப்போகிறது என்று பார்க்க வேண்டும்.

வெல்லவே முடியாத, அசகாய சூரர் என்று நரேந்திர மோடியைப் பற்றிய பிம்பம் உருவாக்கப்பட்டது குஜராத் என்ற உலைக்களத்தில் தான். அவருடைய அரசியல் பாணியை ஏற்றுக் கொண்ட குஜராத் வாக்காளர்கள் தொடர்ந்து அவருக்கு பொதுத் தேர்தல்கள்தோறும் வாக்களித்தார்கள்.

பிரதமராவதற்காக 2014 மக்களவைப் பொதுத் தேர்தலில் அபரிமிதமாக ஆதரித்தார்கள். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, இப்போது அவருக்கு அளித்துவந்த அந்த அமோக ஆதரவைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். 182 உறுப்பினர்களைக் கொண்ட குஜராத் சட்டப் பேரவையில், பாஜகவுக்கு 99 இடங்களை மட்டுமே வழங்கியிருக்கிறார்கள். என்றாலும் ஆதரவு தொடர்கிறது!

குஜராத் தேர்தல் முடிவு வெளியானதும் முதலில் கருத்து தெரிவித்தது மேற்கு வங்கத்தின் முதல்வர் மம்தா பானர்ஜி. "2019-க்கு முன்னதாகவே பூனைக்கு மணியைக் கட்டிவிட்டது குஜராத்" என்று கூறியிருக்கிறார். "2019-ல் புதிய மாற்றத்தை ஏற்படுத்த அனைத்து மதச்சார்பற்ற கட்சிகளையும் காங்கிரஸ் அரவணைத்துச் செல்ல வேண்டும்" என்று சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் உத்தர பிரதேசத்திலிருந்து கோரியிருக்கிறார். "நாட்டின் பன்மைத் துவத்தைக் காக்க அனைத்து மதச்சார்பற்ற கட்சிகளும் ஒன்றுசேர வேண்டும், இதுவே குஜராத் சொல்லும் செய்தி" என்று திமுக செயல் தலைவர் மு.க. ஸ்டாலின் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

பிஹார், மேற்கு வங்கம், உத்தர பிரதேசம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் வென்ற கட்சிகளுக்கு மக்கள் அமோக ஆதரவு தெரிவித்த நிலையில், குஜராத்தில் ஆட்சி மாற்றத்தை மக்கள் விரும்பினாலும் ஏன் அப்படிப்பட்ட ஆதரவைத் தங்களுக்கு அளிக்கவில்லை என்று தன்னைத் தானே கேட்டுக்கொள்ள வேண்டும் காங்கிரஸ்.



அப்படியானால் ஆட்சியை குஜராத் காங்கிரஸ் தலைவர்களிடம் ஒப்படைக்க மக்கள் முழுதாகத் தயாராக இல்லையா? காங்கிரஸ் வென்றால் இவர்தான் முதலமைச்சர் என்று யாரையும் சொல்ல முடியாமல் போனதேன்? கிராமப்புறங்களில் மிக மோசமாகத் தோற்ற பாஜக, நகர்ப்புறங்களில் மட்டும் அதிக இடங் களில் வெற்றி பெற்றது எப்படி? பணமதிப்பு நீக்கம், ஜிஎஸ்டி ஆகியவற்றால் வணிகர்கள், நடுத்தர வகுப்பினர் கடுமையாகப் பாதிக்கப்பட் டிருந்தும் வென்றது எப்படி? ஜவுளி உற்பத்தி யாளர்களும் வைரம் வெட்டும் தொழில் செய் பவர்களும் ஜிஎஸ்டியைக் கண்டித்து தங்களு டைய உற்பத்திப் பிரிவுகளை இரு வாரங்கள் மூடிவைத்து கடுமையாக எதிர்ப்பு தெரிவித்த நிலையிலும் அகமதாபாத், வடோதரா, ராஜ்கோட், சூரத் நகரங்களில் பாஜகவுக்கு அதிக இடங்கள் எப்படிக் கிடைத்தன?

காங்கிரஸும் பிற எதிர்க்கட்சிகளும் கற்றுக் கொள்ள இதில் நிறையப் பாடங்கள் உள்ளன. வேளாண் துறையில் குறிப்பாக, ஊரகப் பகுதி களில் மக்கள் தாங்கொணாதத் துன்பங்களுக்கு ஆளாகியுள்ளனர். கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட சமூகநலத் துறைகளை மத்திய அரசு புறக் கணித்துவிட்டது. புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க அறவே தவறிவிட்டது. இதையெல் லாம் சுட்டிக்காட்டிப் பேசும் அதே வேளையில், இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க தங்களிடம் உள்ள திட்டம் என்ன என்பதைத் தெளிவாகவும் விரிவாகவும் தயாரித்து மக்களிடம் பேச வேண் டும். அவர்களுடைய கவனம் நகர்ப்புறங்களைச் சேர்ந்த நடுத்தர வர்க்கத்தின் மீதும் இருக்க வேண்டும்!

பாரம்பரியமிக்க ஜனநாயக நாட்டில் தேய்ந்து வருகிறதா? மக்கள் நாயகம்! இதை கேள்விக்குறியாகத்தான் பார்க்கப்படுகிறது.

நடந்து முடிந்து ஆர்.கே.நகர் இடைத் தேர்தல் யார் தயவுமின்றி சுனாமியாக பணத்தை சுற்றி வீசி வாக்காளர்களை திசை திருப்பி வெற்றி பெற்று இருக்கிறார்கள். திராவிடக் கட்சிகளின் கொள்கை சிதைவும் ஒரு காரணமாக பார்க்கப்படுகிறது. தேர்தல் ஆணையம் தனது முழு அதிகாரத்தை பயன்படுத்த தவிற விட்டதே தேர்தல் ஆணையத்தின் நம்பகத் தன்மை காட்டு கிறது. ஒரு பக்கம் வேட்பாளர்கள் மீது மக்கள் கொண்டுள்ள கோபத்தின் எதிர் முகம்தான் பண விளையாடல் என்று கூட சொல்லலாம். ராமன் ஆண்டால் என்ன? ராவணன் ஆண்டால் என்ன? எனக்கொன்னும் கவலையில்லை என்ற பாடல் தான் நினைவுக்கு வருகிறது.

யார் வெற்றி பெற்றாலும் தொகுதியின் பக்கம் தலை வைத்துக் கூட பார்ப்பதில்லை. உதாரணத்திற்கு ஒரு படத்தில் ஒரு காட்சி வருகிறது. நடிகர் பாண்டியராஜன் தியேட்ட ருக்கு குள்ளமான உயரம் கொண்ட கிங்காங்கை அழைத்துக்கொண்டு தியேட்டருக்கு செல்வார். ஒரு டிக்கெட்டை மட்டுமே வைத்துக்கொண்டு உள்ளே செல்வார். டிக்கெட் வாங்குபவர் உள்ளே அனுமதிக்க முடியாது. இரண்டு டிக்கெட் இருந்தால்தான் அனுமதிப்பேன் என்று சொல்ல இரண்டு பேருக்கும் வாக்குவாதம் நடக்கும் முடிவில் டிக்கெட் இருந்தால் எந்தக் கழுதையா இருந்தாலும் உள்ளே விடுவேன் என்று சொல்லு வார் டிக்கெட் வாங்குபவர். சிறிது நேரத்தில் ஒரு கழுதையின் கழுத்தில் டிக்கெட்டை கட்டி விட்டு தியேட்டருக்கு உள்ளே அனுப்புவார் அதைப்போல் மக்களுக்கு பணம் கொடுப்பவர் கள் யாராக இருந்தாலும் நாங்கள் வாக்களிப் போம் என்ற மனநிலையே ஆர்.கே.நகர் தேர்தல் காட்டுகிறது.

இனி வரும் காலங்களில் ஜனநாயகத்தை தீர்மானிப்பது பண நாயகம்தான் என்ற நிலை உறுதிப்படுத்துகிறது.

**- அகிலாண்டேஸ்வரி**



# ஜி.எஸ்.டி வரம்பிற்குள் பெட்ரோல், டீசல் ஏன் வரவில்லை?

பெட்ரோல் மற்றும் டீசல் உள்ளிட்டவற்றை சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) வரம்பிற்குள் கொண்டு வர வேண்டும் என்ற யோசனைக்கு மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி ஆதரவு தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் நேற்று எதிர்க்கட்சியினர் ஜி.எஸ்.டி வரம்பிற்குள் பெட்ரோலியப் பொருள்களைக் கொண்டு வராதது ஏன் என்று கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த ஜெட்லி, பெட்ரோலியப் பொருள்களை ஜிஎஸ்டி-க்குள் கொண்டு வருவதற்கு அரசு தயாராக உள்ளதாகக் கூறினார்.

இது குறித்த விவாதத்தில் பேசிய முன்னாள் மத்திய நிதி அமைச்சரான ப. சிதம்பரம், தற்போது பாஜக 19 மாநிலங்களில் ஆட்சியில் உள்ளது. இந்த நிலையில் பெட்ரோலியப் பொருள்களை ஜிஎஸ்டி வரம்பிற்குள் கொண்டு வருவதற்கு எது தடையாக உள்ளது என்று கேள்வியெழுப்பினார். இது குறித்து ஜிஎஸ்டி கவுன்சில் எப்போது கூடி முடிவு செய்யப் போகிறது என்று மேலும் கேட்டார்.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஜிஎஸ்டி குறித்து தாக்கல் செய்த வரைவு மசோதாவில் கூட பெட்ரோலிய பொருள்களை சேர்க்கவில்லை. மேலும் இவ்விதம் சேர்ப்பது மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையேயான பேரத்துக்கு வழி வகுக்கும் என்பதை காங்கிரஸ் கட்சி உணர்ந்திருந்தது. இந்த விஷயத்தில் கருத்தொற்றுமை ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான் காத்திருப்பதாக ஜெட்லி பதிலளித்தார். எவ்வளவு விரைவில் கருத்தொற்றுமை ஏற்பட்டாலும் அதை நிறைவேற்ற அரசு தயாராக உள்ளதாகக் கூறினார்.

**- இர்வின்**



# தீராத மணல் தட்டுப்பாடு பொதுமக்கள் அவதி...

தமிழகத்தின் ஆறுகளிலிருக்கும் மணல் குவாரிகளை ஆறு மாதங்களுக்குள் மூடிவிட வேண்டும். ஆறுகளில் இனி புதியதாக மணல் குவாரிகளைத் திறக்கக் கூடாது. தமிழக அரசு வெளிநாடுகளிலிருந்து ஆற்று மணலை இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். ஆற்று மணலுக்கு மாற்றாக 'எம் - சாண்ட்' செயற்கை மணல் பயன்பாட்டை அரசு ஊக்குவிக்க வேண்டும். கருங்கல் ஜல்லிகளை உடைக்கும் கல்குவாரிகளைத் தவிர கிரானைட் கற்களை வெட்டி எடுக்க அனுமதிக்கக் கூடாது"

ஆறுகளில் மணல் அள்ளுவது தொடர்பாக சமீபத்தில் உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் முக்கிய அம்சங்கள் இவை.

ஆற்று மணலுக்கு மாற்று குறித்து கடந்த பத்து ஆண்டுகளாகவே பேசப்பட்டுவரும் நிலையில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு அதனை உறுதி செய்துள்ளது. தவிர, தமிழக ஆறுகளில் அள்ளுவதற்கு இனி மணல் இல்லை. அரை மீட்டர் என்றிருந்த அளவைவிட 10 - 25 மீட்டர் ஆழம் வரையெல்லாம் மணல் அள்ளப்பட்டுவிட்டது. இனி வழியே இல்லை, மணலுக்கான மாற்றை நாம் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். மாற்று மணல் சரியில்லை எனில் அதனினும் சரியான மாற்றைக் கண்டுபிடித்தாக வேண்டும். அதற்கான தேடலே இந்தக் கட்டுரை.

காட்டாறுகள் காடு, மலைகளில் ஓடிவரும் போது பாறைகளை உருட்டியும் சிதைத்தும் அரித்தும் சமதளத்துக்கு கொண்டுவரும் கனிமமே ஆற்று மணல். ஆற்றுப் படுகைகளில் ஒரு மீட்டர் உயரத்துக்கு மணல் உருவாக சுமார் அரை நூற்றாண்டேனும் தேவை. இயற்கையின் நியதிப்படி இயற்கையாக உற்பத்தியாகும் மணலின் அடிப்படையில் மட்டுமே மனிதர்கள் ஆற்று மணலை எடுத்துக்கொள்ளலாம். அதாவது, ஆண்டுக்கு ஒரு டன் மணல் இயற்கையாக உற்பத்தியானால் அந்தளவுக்கு அல்லது அதனைவிட குறைவாக மட்டுமே மணலை எடுக்க வேண்டும். அப்போதுதான் சமநிலையைப் பேண முடியும்.

அடிப்படையில் மணல் ஒரு தண்ணீர் தாங்கி. மணல் இல்லாவிட்டால் பூமியின் அடுத்தடுத்த மண் அடுக்குகளின் வழியாக தண்ணீர் உள்ளே சென்றுவிடும். நிலத்தடி நீர் மட்டம் உயருமே என்று தோணலாம். அதை எடுக்க பல மடங்கு செலவு செய்ய வேண்டும். தவிர, நமது பாரம்பரியக் கால்வாய்கள் ஆற்றின் மணல் மட்டத்துக்கு ஏற்ப அமைக்கப்பட்டிருக்கின்றன. பல அடி ஆழத்துக்கு மணலை அள்ளிவிட்டதால் கால்வாய்களுக்கு தண்ணீர் செல்ல முடியவில்லை. இதனால் சிற்றாறுகள், ஏரிகள், குளங்களுக்கு தண்ணீர்வரத்து தடைபடுகிறது. விவசாயத்துக்கு தண்ணீர் கிடைப்பதில்லை.

ஆற்றுப் படுகைகளின் ஆழம் இயல்புக்கு மாறாக அதிகரித்ததால் விபத்துக்களும் உயிர்ச் சேதங்களும் அதிகரிக்கின்றன.

தமிழக ஆறுகளில் 38 அரசு மணல் குவாரிகள் இயங்கிவந்தன. அவற்றில் 17 மணல் குவாரிகளுக்கு அனுமதி காலம் முடிந்துவிட்டது. ஆனாலும் சட்டவிரோதமாக அங்கேயும் மணல் அள்ளப்பட்டு வந்தது. மீதமுள்ள 21 குவாரிகளில் அரசே மணல் அள்ளி விற்றுவருகின்றன. மணலை அள்ளுவதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. மணலை மனித சக்தியால் மட்டுமே எடுக்க வேண்டும். இயந்திரங்களால் அள்ளக்கூடாது. அரை மீட்டர் ஆழத்துக்குள் மட்டுமே மணல் எடுக்க வேண்டும். நீர்மட்ட அளவுக்குக் கீழே மணல் அள்ளக்கூடாது.

குடிநீர் கிணறுகள், பம்புகளிலிருந்து 500 மீட்டருக்குள் மணல் அள்ளக் கூடாது. ஆனால், 20 மீட்டர் ஆழம் வரை மணல் அள்ளுகிறார்கள். தற்போது 2.5 யூனிட் மணலின் அரசு விலை ரூ.1,050 மட்டுமே. ஆனால், 3 யூனிட் கொண்ட ஒரு லோடு மணலின் விலை 50 ஆயிரம் மூதல் 80 ஆயிரம் வரை வெளியே விற்கப்படுகிறது. இதற்கு காரணமாக மணல் கிடைக்க 15 நாட்களுக்கு மேல் குவாரியில் காத்திருக்க வேண்டும்.

15 நாட்கள் ஓட்டுநர், உதவியாளர் சம்பளம் மற்றும் லாரி வாடகை கொடுக்க வேண்டியிருக்கிறது. அதனால் பல மடங்கு விலை ஏற்றம் தவிர்க்க முடியாது என்கிறார்கள் மணல் விற்பனையாளர்கள். மணல் விலை உயர்வால் ரூ.1700-ஆக இருந்த ஒரு சதுர அடி கட்டுமானச் செலவு ரூ.3,000-ஆக உயர்ந்துவிட்டது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு மட்டுமே தினமும் 10 ஆயிரம் லோடு மணல் தேவை. தமிழகம் முழுவதும் 30 ஆயிரம் லோடு மணல் தேவை. மொத்தமாக ஆண்டுக்கு சுமார் ஒரு கோடி யூனிட் மணல் தமிழகத்துக்கு தேவை. இவைதவிர கேரளம், கர்நாடக மாநிலங்களுக்கு செல்லும் மணல் கணக்கு தனி. ஆனால், தற்போது நீதிமன்றம் உத்தரவால் குவாரிகள் ஆறு மாதங்களில் மூடப்படும் என்பதால் மணல் தேவை கேள்விக் குறியாகியிருக்கிறது.

தவிர, ஆறுகளில் அளவுக்கு மீறி மணல் அள்ளிவிட்டதால் அவ்வளவு மணலும் இங்கில்லை. மணலுக்கு மாற்றான 'எம் சாண்ட்' எனப்படும் (Manufacturing sand) செயற்கை மணலுக்கு நமது கட்டுமானங்கள் மாறுவது கட்டாயமாகிறது.

செயற்கை மணல் குறித்த விளக்கங்களை அளிக்கிறார் தமிழ்நாடு மூத்தப் பொறியாளர் சங்கத்தின் வீரப்பன். "கருங்கல் ஜல்லிகளை உடைத்து தயாரிக்கப்படுவதே எம்-சாண்ட் எனப்படும் செயற்கை மணல். இதுவும் கட்டுமானத் துறையின் தரக்கட்டுப்பாடான 'ஐ.எஸ்.383' கொண்டதுதான். செயற்கை மணலின் மணியளவில் பாதிக்கு மேல் பருமணல் இருப்பதாகவே சோதனை முடிவுகள் தெரிவிக்கின்றன. இதனால், தரமும் வலிமையும் கூடுதலாகவே கிடைக்கும்.

பூச்சு வேலைகளுக்கு செயற்கை மணல் ஏற்றதாக இல்லை என்று சிலர் சொல்கிறார்கள். ஜல்லி தயாரிக்கும்போது கிடைக்கும் கிரஷர் தூசுகளைப் பூச்சுக்குப் பயன்படுத்த முடியும். செயற்கை மணலில் பூச்சு வேலைக்கென்றே சிறப்பு பூச்சு மணல் சந்தையில் கிடைக்கிறது. அதுவும் கிடைக்கவில்லை என்றாலும் செயற்கை மணலை சல்லடையில் சல்லித்து பயன்படுத்திக்


செயற்கை மணல்

கொள்ளலாம்.

செயற்கை மணல் கான்கிரீட்டில் தண்ணீருடன் superplasticizer கலவை கலந்து பயன்படுத்தும்போது ஆற்று மணல் கான்கிரீட்டை விட இது உறுதியாக இருக்கிறது. மத்திய தரைக் கடல் நாடுகள் உட்பட பல்வேறு நாடுகளில் செயற்கை மணலைப் பயன்படுத்தி உறுதியான கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. உலகின் மிக உயரமான கட்டிடமான துபாயின் புர்ஜ் கலிஃபா செயற்கை மணலால் கட்டப்பட்டது. எல்லாவற்றையும்விட செயற்கை மணலின் விலை ஆற்று மணலை விட சுமார் 30 சதவீதம் குறைவு” என்கிறார்.

இறக்குமதி மணல் மூலம் மணல் தேவையை பூர்த்தி செய்வது நீண்ட காலத்துக்கு சாத்தியம் இல்லை; நிரந்தரத் தீர்வும் இல்லை. ஏனெனில் சர்வதேச அளவில் மணல் ஏற்றுமதி விவகாரம் சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் சிக்கி சர்ச்சைக்குள்ளாகி வருகிறது. சர்வதேச அளவில் மணல் இறக்குமதியில் முதலிடத்தில் இருக்கிறது சிங்கப்பூர். உலக ஏற்றுமதி மணலில் 13 சதவீதத்தை சிங்கப்பூர் இறக்குமதி மூலம் மட்டுமே பெறுகிறது. இரண்டாம் இடத்தில் கனடாவும் (11%), மூன்றாம் இடத்தில் பெல்ஜியமும் (9 %) இருக்கின்றன. உலகில் அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா உட்பட 20 நாடுகள் மணலை ஏற்றுமதி செய்கின்றன.

“பெரும்பாலான கான்கிரீட் கழிவுகள் பிரத்யேக இயந்திரங்கள் மூலம் உடைத்து ஜல்லிகளாக பயன்படுத்தப்படுகிறது. கான்கிரீட் கழிவுகளை மறுசுழற்சி செய்து முழுமையாக ஒரு கட்டிடத்தையே கட்டலாம். வழக்கமான உறுதியில் 5 - 10 சதவீதம் மட்டுமே குறையும். இதுகுறித்த ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடக்கின்றன. எதிர்காலத்தில் கட்டுமானக் கழிவுகளை பயன்படுத்துவது அதிகரிக்கும்” என்கிறார் அவர்.

ஹாலோ ப்ளாக் கற்கள் செங்கல்லைவிட உறுதி குறைவானது என்பதால் குறிப்பிட்ட சதவீதத்தினர் சுற்றுச்சுவர் கட்ட மட்டுமே பயன்படுத்துகிறார்கள். தற்போது ‘ஸ்மார்ட் செங்கல்’ எனப்படும் புரோத்தர்ம் ப்ளாக் நவீன ‘ஹாலோ பர்ண்ட் ப்ளாக்’ கற்களாக உருவெடுத்துள்ளன. செங்கலைவிட 60 சதவீதம் எடை குறைவான இது செங்கல்லை விட 45 சதவீதம் சூட்டை தாங்குகிறது. இது கட்டிடத்தின் உள்பகுதியை குளிர்ச்சியாகவும் வைத்திருக்கிறது. ஆனாலும் இதுவரை பெரியளவில் இதுவும் கட்டுமானத் துறையில் பயன்பாட்டுக்கு வரவில்லை.

**- கனகதுர்கா**


**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. **Email : news@makkalvisaranai.com**
போன் : 044 - 4354 2611, செல் : 93821 33334



# வீழ்ந்த தி.மு.க அழுத அ.தி.மு.க

கடந்த ஏப்ரலில் ஆர்.கே.நகர் இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டபோது போட்டியிட்ட என்.மருதுகணேஷ் இந்த முறையும் போட்டியிட்டார். ஆர்.கே.நகர் தொகுதியிலேயே பிறந்து வளர்ந்த அவர், கடுமையாக உழைத்தும் 3-வது இடமே கிடைத்துள்ளது. இது தொடர்பாக திமுக நிர்வாகிகளிடம் பேசிய போது பல்வேறு தகவல்களைத் தெரிவித்தனர்.

ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் டெபாசிட் தொகையைப் பறி கொடுத்து திமுக படுதோல்வி அடைந்திருப்பது அக்கட்சியினரை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

நடந்து முடிந்த ஆர்.கே.நகர் இடைத் தேர்தலில் பிரதான எதிர்க்கட்சியான திமுக 24,651 வாக்குகளை மட்டுமே பெற்று டெபாசிட் தொகையை பறிகொடுத்துள்ளது. கடந்த 2016 பொதுத்தேர்தலில் ஜெயலலிதாவை எதிர்த்துப் போட்டியிட்ட சிம்லா முத்துச்சோழன் 57,673 வாக்குகளைப் பெற்ற நிலையில், தற்போது இதில் பாதியைக்கூட பெறாத நிலை ஏற்பட்டிருப்பது அக்கட்சியினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

கடந்த ஏப்ரலில் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டபோது திமுக திட்டமிட்டு களப்பணியாற்றியது. அந்த வேகத்தில் பாதியைக்கூட இப்போது காட்டவில்லை என்கின்றனர் அக் கட்சியினர். அதிமுக இரண்டாகப் பிளவுபட்டுள்ளதால் வாக்குகள் இரண்டாகப் பிரியும். எனவே, கண்டிப்பாக வெற்றி கிடைக்கும் என திமுக செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் நினைத்தனர். இதனால் தேர்தல் பணிகளில் தீவிரம் காட்டவில்லை. பிரச்சாரத்தில் காட்டிய வேகத்தை வாக்குச் சாவடி அளவில் கமிட்டி அமைப்பது, அவர்கள் மூலமாக மக்களைச் சந்திப்பது ஆகியவற்றில் காட்டவில்லை. இது தோல்விக்கு முக்கிய காரணமானது என திமுக நிர்வாகிகள் சிலர் தெரிவித்தனர்.

அரசு அதிகாரத்தின் துணையில்லாமல், சுயேச்சையாக புதிய சின்னத்தில் போட்டியிடும் டிடிவி தினகரன் வாக்குகளைப் பிரிப்பாரே தவிர, வெற்றி பெற முடியாது என ஸ்டாலின் உள்ளிட்டோர் கருதினர். அதிமுக வாக்குகளை மதுசூதனனும், தினகரனும் பிரித்தால் திமுகவுக்கு எளிதில் வெற்றி கிடைக்கும் என கணக்கிட்டனர். இதனால் தினகரனைப் பற்றி கவலைப் படாமல் மதுசூதனன் மட்டுமே தங்களது எதிரி வேட்பாளர் என்பது போல திமுகவின் பிரச்சாரம் அமைந்தது. ஆனால், முடிவுகள்

எதிர்மாறாக அமைந்துவிட்டன.

ஆர்.கே.நகரில் அதிமுக வென்றால் முதல்வர் பழனிசாமி அரசு பலம் பெற்றுவிடும் எனவே, அக்கட்சியை தோற்கடிப்பதுடன் 3-வது இடத் துக்கு தள்ள வேண்டும் என திமுக திட்ட மிட்டது. அதிமுக 3-வது இடத்துக்கு போக வேண்டுமானால் தினகரன் 2-வது இடத்துக்கு வர வேண்டும். எனவே, தினகரனுக்கு சாதகமாக சில வியூகங்களை திமுக வகுத்ததாகக் கூறப் படுகிறது. அதன் ஒரு பகுதியாகவே விஷால் வேட்புமனு தாக்கல் செய்தார் என்கின்றனர்.

அதிமுக வாக்குகள் பிரிந்து தினகரனுக்கு செல்ல வேண்டும் என நினைத்து திமுக செய்த சில காரியங்கள் அக்கட்சியினரையே பதம் பார்த்து விட்டதாக திமுகவினரே வேதனைப்படு கின்றனர். ''தனக்கு ஒரு கண் போனாலும் பரவா யில்லை. அதிமுகவுக்கு இரண்டு கண்ணும் போக வேண்டும் என நினைத்து தினகரனுடன் ஸ்டாலின்ரகசிய உடன்பாடு செய்து கொண்டார். ஆனால் திமுகவுக்கு இரண்டு கண்களும் போய்விட்டது'' என முதல்வர் கே.பழனிசாமி கூறியதை நினைவுபடுத்துகின்றனர் திமுகவினர்.

காங்கிரஸ், மதிமுக, மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி என பல்வேறு கட்சிகள் திமுகவுக்கு ஆதரவு தெரிவித்தன.

ஆனால், இக்கட்சிகளின் நிர்வாகிகளையும், தொண்டர்களையும் ஒருங்கிணைத்து களப்பணி யாற்ற வைக்க திமுக தவறிவிட்டதாக காங்கிரஸ், விசிக நிர்வாகிகள் குற்றம்சாட்டுகின்றனர்.

வெற்றி மிதப்பில் கூட்டணி கட்சிகளை திமுகவின் மாவட்ட நிர்வாகிகள்கூட கண்டு கொள்ளவில்லை. இதனால் தலைவர்கள் வரும் போது பெயரளவுக்கு வந்துவிட்டு கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஒதுங்கிவிட்டனர். அதே நேரத் தில் இப்படி அதிருப்தியில் இருந்த நிர்வாகி களை தினகரன் தரப்பினர் தக்கபடி கவனித்து விட்டதாகவும் கூறப்படுகிறது. இதனால் கூட்டணி கட்சிகளின் வாக்குகள் திமுகவுக்கு வரவில்லை.

தினகரன் மற்றும் அதிமுகவினர், தேர்தல் பணியாற்றிய நிர்வாகிகள் தொண்டர்களுக்கு பணத்தை வாரியிறைத்தனர். ஆனால், திமுகவில் தேர்தல் பணியில் உள்ள தொண்டர்களின் செலவுகளுக்காக கொடுக்கப்பட்ட பணத்தை திமுக பகுதிச் செயலாளர்கள் முழுமையாக கொடுக்காமல் பதுக்கிவிட்டதாக திமுகவினரே புலம்புகின்றனர்.

கடந்த 7 ஆண்டுகளாக ஆட்சியில் இல்லாத தால் கிடைத்த பணத்தை இதுவரை செய்த செலவுகளுக்கு ஈடாக எடுத்துக் கொண்டு விட்டதாகத் தெரிகிறது. இதனால் திமுகவினர் தேர்தல் பணிகளில் முனைப்பு காட்டவில்லை.



தினகரனுக்கு எதிரான மத்திய பாஜக அரசின் நடவடிக்கைகளால் சிறுபான்மையி னருக்கு அவர் மீது பெரும் அனுதாபம் ஏற்பட்டது. மோடி - கருணாநிதி சந்திப்புக்குப் பிறகு பாஜக மீதான விமர்சனத்தை திமுக குறைத்துக் கொண்டது. இதனால் பாஜகவுடன் திமுக நெருங்குவதாக விமர்சனம் எழுந்தது. இதனால் திமுகவின் வாக்கு வங்கியாக இருந்த சிறுபான்மையினரின் வாக்குகள் தினகரனுக்கு மாறிவிட்டதாகக் கூறப்படுகிறது.

என்னதான் பணபலம் வென்று விட்டதாகக் கூறினாலும் டெபாசிட் இழந்தது திமுகவுக்கு ஏற்பட்ட பெரும் தோல்வி. இதற்கான கார ணங்களை ஆய்வு செய்து தவறுகளை திருத்திக் கொள்ளாவிட்டால் எதிர்காலம் மோசமாக இருக்கும் என்கின்றனர் திமுகவினர்.

**- வீ. அருணாச்சலம்**

**சிறப்புக் கட்டுரை**

# சோனியா காங்கிரஸ்...





# ராகுல் காங்கிரஸ்...

பிரதமராக இருந்த இந்திரா காந்திக்கு மிகவும் சோதனையான காலக்கட்டத்தில் உற்ற துணையாக இருந்த சஞ்சய் காந்தி விமான விபத்தில் மரணமடைந்தது ராஜீவ் காந்தியின் எதிர்கால திசையை மாற்றியமைத்தது. விமான ஓட்டியாக தமது வாழ்க்கையை 13 ஆண்டுகாலம் மகிழ்ச்சியாக கழித்துக்கொண்டிருந்த ராஜீவ் காந்தி அரசியல் பிரவேசம் செய்யவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. ஆனால், ராஜீவ் காந்தி அரசியலில் ஈடுபடுவதை சோனியா காந்தி எதிர்த்தார். அதேநேரத்தில் இந்திரா காந்திக்கு ஏற்பட்ட சோதனைகளை அருகிலிருந்து பார்த்த சோனியா காந்தி தமது முடிவை மாற்றிக் கொண்டு, ராஜீவ் காந்தி அரசியலுக்கு வருவதை ஏற்றுக்கொண்டார்.

எனக்கு மகள் இல்லையே என்கிற குறையை எனது மருமகள் போக்கிவிட்டார் என்று ஒரு முறை இந்திரா காந்தியே கூறியிருக்கிறார்.

பொற்கோயிலுக்குள் ராணுவத்தை அனுப்பிய நடவடிக்கைக்குப் பிறகு, எந்த நேரத்திலும் தாம் கொல்லப்படலாம் என்கிற மனநிலை பிரதமர் இந்திரா காந்திக்கு இருந்தது. இதுகுறித்து ராஜீவ் காந்தியுடன் பலமுறை பேசியிருக்கிறார்.

இந்நிலையில், பிரதமராக இருந்த இந்திரா காந்தியை 1984 அக்டோபர் 31-ம் தேதி அவரது மெய்க்காவலர்களே சுட்டு படுகொலை செய்தனர். அந்தக் கோர நிகழ்வின்போது வீட்டிலிருந்த சோனியா காந்தி வெளியே ஓடிவந்தார். இந்திரா காந்தியின் உடலைப் பார்த்து கண்ணீர் விட்டு கதறி அழுதார். மருத்துவமனையை நோக்கி வாகன நெரிசல் காரணமாக கார் மெதுவாக சென்றது. மாலை 3.15 மணிக்கு ராஜீவ் மருத்துவமனைக்கு வந்தார். எங்கும் மக்கள் திரள்.

ஒருபுறம், தலைமைப் பதவியை ஏற்க வேண்டுமென்று கட்சித் தலைவர்கள் ராஜீவ் காந்தியை நெருக்கிக் கொண்டிருந்தனர். முதன்மைச் செயலாளரான பி.சி. அலெக்சாண்டர், காத்திருக்கும் அறைக்குச் சென்றபோது அங்கே சோனியா அழுதபடி, ''நீங்கள் பதவியை ஏற்றுக் கொள்ளாதீர்கள், வேறு யாரேனும் அந்தப் பொறுப்பை ஏற்கட்டும்" என்று கடினமான குரலில் அழுத்தமாக கூறினார். ராஜீவ் காந்தி மனைவியிடம், "இது என்னுடைய கடமை, நான் இதை செய்துதான் ஆகவேண்டும்" என்று மென்மையாகக் கூறினார்.

இந்நிலையில் பி.சி. அலெக்சாண்டர் "நேரமாகிவிட்டது, உடனே வாருங்கள்" என்று அழைத்தார். ''நாடாளுமன்ற காங்கிரஸ் குழு முடிவெடுக்கட்டும். குடியரசுத் தலைவருக்குச் சொல்லிவிடுங்கள். பின்னர் பதவியேற்புக்கான நேரத்தைக் குறியுங்கள்" என்றார் ராஜீவ் காந்தி.

ஒருமுறை ராஜீவ், "நான் அரசியலில் ஈடுபடுவதில் என் மனைவிக்கு விருப்பமில்லை. என்னை இழந்து விடுவோமோ என்ற எண்ணமே அவருக்கு இருந்தது " என்று கூறியிருந்தார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்காக மூன்று மாநிலங்களில் தீவிர சுற்றுப்பயணம் செய்துவிட்டு கடைசியாகத் தமிழகத்தில் ஸ்ரீபெரும்புதூரில் பிரச்சாரம் செய்ய ராஜீவ் காந்தி 1991 மே 21 ஆம் தேதி மாலை வருகைபுரிய திட்ட

மிட்டிருந்தார். அன்று காலை முதல்கட்ட தேர் தலுக்காக வாக்களித்துவிட்டு மாலை வீட்டிற்கு வந்து குடும்பத்தோடு ஒருசில நிமிடங்களைச் செலவிட்டார். அதுதான் சோனியா தம் கணவரை உயிரோடு பார்த்த கடைசி தருணம்.

தேர்தல் பிரச்சாரத்தின்போது பயங்கரவாதி களால் ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் காந்தி படு கொலை செய்யப்பட்டார். எது நடந்துவிடும் என்று அஞ்சினாரோ அது நடந்துவிட்டது. தமது உயிருக்கும் மேலான கணவரை சோனியா காந்தி இழந்தார்.

கடந்த 2004 நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 146 இடங்களில் வெற்றி பெற்று மத்தியில் மீண்டும் ஆட்சியமைக்கிற நிலை ஏற்பட்டது. நாடாளுமன்ற காங்கிரஸ் குழு கூடி சோனியாவை ஏகமனதாக தலைவராக தேர்வு செய்தது. ஆனால் பிரதமர் பதவியை ஏற்க மறுத்த அவர் பொருளாதார நிபுணரான மன்மோகன் சிங் பெயரைப் பரிந்துரை செய்தார்.

தமது முடிவை சோனியா காந்தி நாடாளு மன்ற காங்கிரஸ் குழுவின் கூட்டத்தில் தெரி வித்து ஆற்றிய உரையில், கடந்த 6 ஆண்டுகளாக நான் அரசியலில் இருக்கிறேன். ஒரு விஷயத்தில் மட்டும் தெளிவாக இருக்கிறேன். நான் ஏற்கனவே தெரிவித்தது போன்று, பிரதமர் பதவியில் எனக்கு நாட்டமில்லை" என்று குறிப்பிட்டார். சோனியா மேலும் பேசும்போது, ''என் உறுதியில் உள்ள நியாயத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். என் முடிவை ஏற்றுக் கொள்ளுங்கள். அதை நான் மாற்றிக்கொள்ள மாட்டேன். உங்களோடு சேர்ந்து பணியாற்றுவதோடு, இந்த நாட்டுக்காகவும் உழைப்பேன என்று உறுதி யளிக்கிறேன்'' என்றார்.

காங்கிரஸ் தலைவராக இருந்த சோனியா காந்தி தலைமைப் பண்புகளை நிரம்பப் பெற்றி ருந்தார். இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி பிரதமர் களாக இருந்தபோது அவர்கள் சந்தித்த பல்வேறு பிரச்சினைகள் குறித்து சோனியா அறிந்து வைத்திருந்தார். அந்த அனுபவத்தின் அடிப்படையில் தமது அரசியல் அணுகு முறையை அமைத்துக் கொண்டார். தேர்தல் பிரச்சாரத்தை எப்படி கையாள்வது என்பதையும் அவர்களிடமிருந்தே கற்றுக் கொண்டார்.

2004 தேர்தலுக்காக 30 ஆயிரம் மைல்கள் பயணம் செய்து 148 பொதுக்கூட்டங்களில்



உரையாற்றினார்.

இத்தகைய அணுகுமுறையை கையாண்ட காரணத்தினால்தான் 1998-ல் 141 இடங்கள், 1999-ல் 114 இடங்கள், பிறகு 2004 இல் 145 இடங்கள் பிடித்து காங்கிரஸ் கட்சியை ஆட்சி யில் அமர்த்தினார். 2009-ல் நடைபெற்ற தேர் தலில் 206 இடங்களைப் பெற்று முன்பை விட பெரும் வெற்றியை ஈட்டித் தந்தார். ஆனால் 2014-ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் 44 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்று ஆட்சியை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

1928-ல் கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் மோதிலால் நேரு தலைமை ஏற்றார். 1929-ல் லாகூர் காங்கிரஸ் மாநாட்டில் ஜவஹர்லால் நேரு தந்தையிடமிருந்து பதவியைப் பெற்றார். இன்று சோனியா காந்தியிடமிருந்து மகன் ராகுல் காந்தி தலைமைப் பொறுப்பைப் பெறுகிறார். இதனைத் தொடர்ந்து, சோனியா காந்தி அரசி யலில் இருந்து ஓய்வுபெற மாட்டார். எந்தப் பதவி யையும் ஏற்காமல் இந்திய தேசிய காங்கிரஸுக்கு ஆலோசனைகளை வழங்கி வழிநடத்தக் கூடிய வராகத் தொடர்ந்து செயல்படுவார்.

கணவர் மறைவிற்குப் பிறகு 7 ஆண்டுகள் அரசியல் துறவறம் மேற்கொண்ட சோனியா காந்தி, காங்கிரஸின் தலைமைப் பொறுப்பை நிர்பந்தமான சூழலில் ஏற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. காங்கிரஸ் மூத்த தலைவர்களின் வற்புறுத்தலின் காரணமாக 1998-ல் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

19 ஆண்டுகள் இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக அரசியல் பயணம் மேற்கொண்டார்.

அன்று இந்திரா காந்தியை தேஷ் கி நேத்தா - தேசத்தின் ஒரே தலைவர் - என்று அழைத் தார்கள். இன்று அதே அடைமொழி சோனியா காந்திக்கும் பொருந்தும். **- கே.ரமேஷ்குமார்**

# அடங்காத சாதி வெறி கொலைகள்!

1917-ல் வெளியான அம்பேத்கரின் முதல் புத்தகம் 'இந்தியாவில் சாதிகள்.' சாதி எப்படித் தோன்றியது என்பதைப் பல ஆய்வு களுடன் விளக்கும் அம்பேத்கர், இறுதியாக 'சாதி தோன்றியதற்குக் காரணம் அகமணம் எனப்படும் ஒரே சாதிக்குள் நடக்கும் திருமணமே' என்பதை நிறுவுவார். அம்பேத்கரின் புத்தகம் வெளியாகி, நூறு ஆண்டுகள் ஆனபின்னும் இன்னும் சாதி மறுப்புத் திருமணத்தைக் கொலைகளின் வழியாக எதிர்கொள்ளும் சமூக அவலத்தை என்னவென்பது?

பட்டப்பகலில் பலர் முன்னிலையில் நடந்த படுகொலை... ஜாமீனே இல்லாமல் ஓராண்டுக்கும் மேல் தொடர்ந்து நடந்த வழக்கு விசாரணை... ஆறு பேருக்குத் தூக்குத் தண்டனை என சங்கர் - கௌசல்யா ஆணவக்கொலை வழக்கு தமிழ்நாடே பேசும், விவாதிக்கும், கருத்து மாறுபடும் ஒன்றாகியிருக்கிறது.

இதில் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியது கௌசல்யாவின் துணிச்சல். தன் காதல் கணவனைச் சாதிவெறிப் படுகொலைக்குப் பலி கொடுத்தபிறகு அவர் விரக்தியில் ஒய்ந்துவிட வில்லை. சங்கரின் குடும்பத்தையே தன் குடும்பமாக ஏற்றுக்கொண்டு, அவர்களுடன் வாழ்ந்துகாட்டுகிறார்.

அதேநேரத்தில் சங்கர் படுகொலைக்குக் காரணமான தன் பெற்றோர் உட்பட உறவினர் களுக்கு எதிரான சட்டப் போராட்டத்தையும் மேற்கொண்டார். இதைத்தனிப்பட்ட இழப்பாக மட்டும் எடுத்துக் கொள்ளாமல், இதற்கு அடிப் படையான சாதியை ஒழிப்பதற்கான அரசியல் நடவடிக்கைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். ஒருவேளை இந்தப் படுகொலை நடக்காமல் இருந்திருந்தால் கௌசல்யாவும் ஒரு சராசரிப் பெண்ணாகவே வாழ்ந்திருப்பார்.

ஆனால், அவரை அரசியல் உணர்வுகொள்ள வைத்ததும், போராளி ஆக்கியதும் சங்கரின் படுகொலைக்குக் காரணமான சாதிவெறிதான். தன் கணவனின் மரணத்துக்கு நீதி கேட்ட கண்ணகியை நாம் படித்திருக்கிறோம்; கௌசல் யாவை நாம் பார்க்கிறோம், பாராட்டுகிறோம். கௌசல்யாவுக்குத் துணைநின்ற முற்போக் காளர்களும் மனித உரிமை ஆர்வலர்களும் பாராட்டத்தக்கவர்கள்.

ஒரு குடும்பப்பிரச்னையாக மட்டுமே இருந்த சாதி மறுப்புத் திருமணங்களைத்





தமிழகம் தழுவிய பிரச்னையாக மாற்றுபவர்கள், ஆதிக்கச்சாதிக் கட்சித்தலைவர்கள். உண்மையில் இவர்களுக்குச் சொந்தச் சாதியில்கூடப் பெரிய செல்வாக்கு இருப்பதாகத் தெரியவில்லை. இவர்கள் தனித்து நின்று, கணிசமான வாக்கு களைப் பெற்று வென்றதாகவும் வரலாறு இல்லை. ஆனால், தி.மு.க, அ.தி.மு.க போன்ற பெரிய அரசியல் இயக்கங்கள் தங்கள் சந்தர்ப் பவாத அரசியலுக்காக இவர்களைக் கூட்டணி யில் இணைத்துக்கொள்வதால்தான் முக்கியத் துவம் பெறுகிறார்கள்.

பெரும்பாலான சாதித் தலைவர்கள் தங்கள் தொழிலைக் காப்பாற்றிக் கொள்ளவும், கட்டப் பஞ்சாயத்து போன்ற சட்டவிரோதச் செயல் களைச் செய்யவும், இழந்த செல்வாக்கை மீட்டுக் கொள்ளவும்தான் சாதியைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். பெரிய அரசியல் இயக்கங்கள் இவர்களைப் புறக்கணித்துத் தனிமைப்படுத்து வதன் மூலம் இவர்களது செல்வாக்கைக் குறைக் கலாம்.

ஆணவக்கொலைகளைத் தடுப்பதற்கான தனிச்சட்டம் என்பது அவசியம். அதேபோல் கேரள அரசு சமீபத்தில் அறிவித்துள்ளதைப் போல, சாதியற்றோருக்கான இட ஒதுக்கீட்டைத் தமிழகத்திலும் கொண்டுவர வேண்டும். இப்படி யான சட்ட நடவடிக்கைகள் அவசியமானவை என்றபோதிலும் கருத்தியல் ரீதியிலான மாற்றங் களும் பண்பாட்டு நடவடிக்கைகளும் கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்தவை.

குறிப்பாகத் தமிழ் சினிமாக்கள் எவ்வளவு அபத்தமானவையாக இருந்தபோதும் தொடர்ச் சியாகச் சாதிக்கு அப்பாற்பட்ட காதலைப் பேசி வந்திருக்கின்றன. ஆனால், சமீபகாலமாகத் தமிழ் சினிமாக்கள் 'காதலை'க் கைவிட்டுவிட்டன என்றே சொல்லலாம். சாதிப்பெருமிதம் பேசும் சினிமாக்களின் வருகைக்குப் பிறகு ஒரே சாதிக் காதல், சொந்தங்களுக்குள் காதல் என்று பேசும் சினிமாக்கள் அதிகரித்திருக்கின்றன.

காதலுக்கு எதிரியாகச் சாதியையும் சாதி யைக் காப்பாற்றும் பெற்றோர்களையும் காட்டிய சினிமாக்கள் முற்றிலுமாக இல்லாமல்போய், பெண்களையே காதலித்து ஏமாற்றுபவர்களாகச் சித்திரிக்கும் அபத்தமான போக்கு தமிழ் சினி மாக்களில் அதிகரித்திருக்கிறது. தலித் வாழ்வி யலை முன்வைத்த 'அட்டகத்தி', 'மெட்ராஸ்', வெளிப்படையாகவே சாதியத்தையும் தீண்டா மையையும் எதிர்த்த 'மாவீரன் கிட்டு', சங்கர் படுகொலையைக் காட்சியாகவே வைத்த 'மகளிர் மட்டும்' போன்ற படங்கள் வரவேற் கத்தக்கவை என்றாலும், தமிழ்க் கலைஞர்கள் கூடுதலான சமூகப்பொறுப்பு உணர்வுடன் இயங்கவேண்டியது அவசியம்.



பெரியார் காலத்தில் சாதிமறுப்புத் திருமணங்கள் செய்வதை ஒரு பண்பாட்டு நடவடிக்கையாகவே முன்வைத்தனர். ஆனால் இப்போது பல முற்போக்கு இயக்கங்களே சாதிமறுப்புத் திருமணங்களைக் கைவிட்டு விட்டன. இடதுசாரி இயக்கங்கள், பெரியாரி யக்கங்கள், தமிழ்த்தேசிய இயக்கங்கள் ஆகிய வற்றில் சாதிமறுப்புத் திருமணம் செய்தவர்கள் அல்லது தங்கள் குடும்பத்தில் சாதி மறுப்புத் திருமணம் செய்வித்தவர்களையே பொறுப் பாளர்களாக அறிவிக்க வேண்டும். கல்வி முறை யிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டியது அவசியம். நமது பாடத்திட்டம் தீண்டாமையின் வரலாற்றை விளக்கும்வகையில் அமையவேண்டும். தீண் டாமையைக் கடைப்பிடிப்பது எப்படிப்பட்ட மனித விரோதச் செயல் என்பது பள்ளி அளவிலேயே உணர்த்தப்பட வேண்டும்.

'கௌரவக்கொலை' என்றழைக்கப்பட்ட வார்த்தை, 'ஆணவக்கொலை' என்று மாற்றப் பட்டு நிலைத்திருப்பது வரவேற்கத்தக்கதுதான். ஆனால், அது வார்த்தைப் பயன்பாடு தொடர் பான மாற்றமாக மட்டுமில்லாமல் கருத்தியல் மாற்றமாகவும் இருக்கவேண்டியது அவசியம்.

**- வீ.வடிவேல்**



# என்றும் கரை படியா கக்கன்..!

மதுரை மேலூர் வட்டத்தில் தும்பைப்பட்டி என்ற சிற்றூரில் பூசாரி கக்கன் என்ற தோட்டிக்கு மகனாகப் பிறந்து, வறுமையில் உழன்று, பெரும்பாடுகளுக்கிடையே பள்ளி இறுதிவகுப்பு வரை படித்து முடித்துப் பொது வாழ்வில் ஈடுபட்ட மாமனிதர் அவர். மதுரை வைத்தியநாத ஐயர் கக்கனை வளர்ப்பு மகனாக அரவணைத்துக் கொண்டார்.

கக்கன் அமைச்சராக இருந்தபோது அவரை சந்திக்க அவரது நெருங்கிய நண்பரும் எம்.எல். ஏ.வுமான டி.பி. ஏழுமலை அடிக்கடி வீட்டுக்கு வருவார். ஒரு முறை அவர் வந்தபோது அவருக்கு காபி கொடுக்குமாறு கக்கன் சொல்ல.. "வீட்டில் பால் இல்லை" என அவரது மனைவி தயங்கி தயங்கி சொன்னார்.

அமைச்சர் வீட்டில் பால் இல்லையா.. ஏழுமலைக்கு அதிர்ச்சி. "ஒரு பசு மாடு வாங்க வேண்டியது தானே?" என எழுமலை சொன்ன போது கக்கன் புன்னகையை மட்டும் பதிலாகத் தந்தார். அடுத்த சில நாட்களில் நூற்றைம்பது ரூபாய்க்கு ஒரு மாடு வாங்கி வந்தார் ஏழுமலை.

இதைக்கண்ட கக்கன், "மாடு வாங்கி வந்ததற்கு மிக்க மகிழ்ச்சி. அதற்கான ஒப்புகை சீட்டு எங்கே?" எனக் கேட்டதும் நொந்து போனார் ஏழுமலை. "அமைச்சராக இருக்கும் நான் எந்த பொருள் வாங்கினாலும் ஒப்புகை சீட்டு வைக்க வேண்டும் என்பது எம்.எல்.ஏ.வான உங்களுக்குத் தெரியாதா? எனக் கோபப்பட்டார்.

திருவொற்றியூர் சந்தைக்குச் சென்று மாடு தரகனை தேடிப்பிடித்து "மாடு வாங்கிய விவ ரத்தை எழுதித் தாப்பா.." என்றார். அவனோ சிரித்தவாறே எழுதிக்கொடுத்தான். அதை கக்க னிடம் கொண்டு போய் கொடுத்தார் ஏழுமலை. ஏதோ சாதித்துவிட்ட திருப்தி அவர் முகத்தில் தெரிந்தது.

ஆனால் கக்கனோ "இந்த ரசீதில் ஏன் ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டி கையெழுத்து வாங்கவில்லை. அப்படி வாங்காத ரசீது எப்படி செல்லும். ஸ்டாம்பு ஒட்டி கையெழுத்து வாங்கி வாங்க.." என்றார். மீண்டும் தரகனைத் தேடி கையெழுத்து வாங்கிக் கொடுத்த பின்னரே மாட்டை வீட்டுக்குள் கொண்டு வர அனுமதித் தார் கக்கன்.



## - நினைவுப்பூக்கள்

இந்தத் தகவலை கக்கன் நினைவு தபால் தலை வெளியீட்டு விழாவின் போது ஏழுமலை சொல்லி கலங்கினார்.

"1968-ல் நாகர்கோவில் நாடாளுமன்ற இடைத்தேர்தலில் காமராசர் போட்டியிட்டார். தேர்தல் பொறுப்பாளர் கக்கன். தேர்தல் முடிந்து நானும் அவரும் ஊர் திரும்பினோம். தேர்தலுக்குக் கொடுத்த பணத்தை கணக்கு பார்த்தபோது நானூறு ரூபாய் குறைஞ்சது. கக்கனுக்கு தாங்க முடியாத வருத்தம். நான் என்னவெல்லாமோ சமாதானம் சொன்னேன். கேக்கல்ல.

என்னை அனுப்பி அவரது மனைவி கையில் கிடந்த இரண்டு வளையல்களை வாங்கி வித்துட்டு வரச்சொன்னார். நானும் வித்துட்டு வந்தேன். அப்போதும் நானூறு ரூபாய் தேறல்ல. வேறும் சில பொருட்களை விற்று நானூறு ரூபாய் தேத்திட்டாரு. பின்னர் சென்னைக்குப் போய் கட்சி பொருளாளரிடம் கணக்கை ஒப் படைத்தோம். "கணக்கை ஒப்படைச்சிட்டேன்" என இவர் காமராசரிடம் போய் சொல்ல அவருக்கு கடுமையான கோபம் வந்தது.

"யாரு உன்கிட்ட கணக்கு கேட்டா.." என சத்தம் போட்டாரு. "அதுதானே முறை" என்றார் கக்கன். "நீங்க படற கஷ்டம் எனக்குத் தெரியும் அது தான் தேர்தல் பொறுப்பை உங்கிட்ட ஒப்படைச்சேன்"ன்னாரு. அப்போது கூட மனைவி நகைகளை விற்று கணக்கை சரி செய்ததை கக்கன் சொல்லல்ல.. அதுதாங்க கக்கன்" என சில ஆண்டுகளுக்கு முன்னர் இதைச் சொன்னவர் கக்கனின் நண்பரான வேணு கோபால் என்பவர்.

நாடாளுமன்ற உறுப்பினர், பத்தாண்டுகள் அமைச்சர், அதுவும் முக்கியத் துறைகளின் அமைச்சர் என பொறுப்புகள் இருந்தபோதும் சல்லிகாசு சம்பாதிக்கவில்லை. கடன் வாங்கித் தான் 1967 தேர்தலில் நின்றார். தேர்தலில் தோற்றவுடன் வாழ்வதற்கு கூட வசதி இல்லாத நிலை.

இதையறிந்த நல்ல உள்ளங்கள் அவருக்கு நிதி திரட்டி தர முன்வந்தனர். பழ. நெடுமாறன் தலைமையில் மணிவிழா என்ற பெயரில் விழா நடத்தி கக்கனுக்கு நிதி தர முடிவு செய்தனர். மதுரை தமுக்கம் மைதானத்தில் விழா சிறப்பாக நடந்தது. சி.சுப்பிரமணியன் தங்கச்சங்கிலி அணிவித்து மகிழ்ந்தார். இந்த மணிவிழாவில் இருபத்தோராயிரம் ரூபாயை கக்கனுக்கு வழங்கினார்கள்.

மறுநாள் காலையில் மேலூர் அருகேயுள்ள நாவினிப்பட்டியைச் சேர்ந்த தனது நண்பரை அழைத்து வரச்சொன்னார் கக்கன். அவர் வந்ததும் தேர்தல் செலவுக்காக நீங்கள் தந்த பதினோராயிரம் ரூபாய் இந்தாருங்கள்.. என்றார்.

உடனேஅவர்."இதைத்திரும்பித்தருவதற்காக நான் உங்களுக்குத் தரவில்லை" என்றார். "இந்தப் பணத்தை என் அவசரத்தேவைக்காக ஆள் அனுப்பி வாங்கினேன். இதை நீங்கள் திரும்பி பெற்றுக்கொள்ளவில்லை என்றால் நமது நட்பு தொடரமுடியாமல் போய்விடும்" எனக் கட்டாயப்படுத்தி கொடுத்தார்.

அதுபோல டிவிஎஸ் நிறுவன கெஸ்ட்ஹவுசில் அமைச்சராக இருந்தபோது தங்கியதற்காக ரூ.1,800 செலுத்துமாறு கொடுத்தனுப்பினார்.. "இதையெல்லாம் அவர்கள் கேட்கவில்லையே ஏன் ? செலுத்த வேண்டும்" என அவரது உறவினர் களும் நண்பர்களும் கேட்டபோது, "நான் என்றாவது திருப்பித் தருவேன் என்ற நம்பிக்கை யில் தான் அவர்கள் கேட்கவில்லை. அந்த நம்பிக்கையை பாழாக்க நான் விரும்ப வில்லை.." என கூறி பணத்தை திருப்பி கொடுத்தார்.

இறுதிவரை ஏழ்மையிலேயே வாடிய கக்கன் நோய்வாய்ப்பட்ட போது, உயர் ரக சிகிச்சைகள் எடுத்துக்கொள்ள வசதியின்றி சென்னை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நினை விழந்த நிலையில் இரு மாதங்கள் இருந்த அவர், 1981 டிசம்பர் 23-ஆம் நாள் உலக வாழ்வை நீத்தார்.

- முனைவர் **ஆ. மவுரியன்**

# சிந்தனை முத்துக்கள்



## மோடி செண்டிமெண்ட்

மிஸ்டர் வைகோ அடுத்த எம்.பி. தேர்தல்ல நீங்க ராகுலை பிரதமராக்க முயற்சி செய்யனும் மாட்டேன்னு மட்டும் சொல்லாதீங்க ●

## என்ன ஒரு புத்திசாலித்தனம்

அன்னே ஒரு டவுட்டு..? வெள்ளைக்காரன் கப்பல், ராக்கெட்டலாம் தயாரிக் கிறான். ஆனா பனியன், ஜட்டி மட்டும் திருப்பூர்ல வாங்குறானே ஏன்? இதுக் கூட தயாரிக்கத் தெரியதா? டேய்.... இதெல்லாம் அவன் தயாரிச்சா சாயக் கழிவுகளால அவுங்க ஆறு, ஏரி, குளம் எல்லாம் நாறிப் போயிடும். அதனால விவரமா நம்ப ஊர்ல செய்ஞ்சு அவங்க நாட்டுக்கு எடுத்துப் போரான் ●




## மலருமா மறுமலர்ச்சி?

தமிழ்நாட்டில் இனி நாம் உருவாக்க வேண்டியது நல்ல தலைவர்களை அல்ல நல்ல வாக்காளர்களைத்தான்●



## அவசரம்

இந்திய ரூபாயின் மதிப்பை கணிக்க முடியாமல் குழப்பமாக உள்ளது என பல உலக நாடுகள் கவலை! இந்தியாவுல இருக்கிற எங்களுக்கே இன்னும் தெரியல அதுக்குள்ள உங்களுக்கு என்ன அவசரம்? ●



## நான்கு

ரொம்ப முயற்சி செய்த பிறகு 21ம் நூற்றாண்டில் நான்காவதாக கிடைத்தது ●

## எது குற்றம்?

அரசாங்கமே சாதி அடிப்படையில்தான் வேலையே தருது. தான் பெத்த புள்ளையை கட்டிக் குடுக்க பெத்தவங்க சாதிப்பாக்கக் கூடாதா? அரசாங்க செஞ்சா சட்டம்! மக்கள் செஞ்சா குற்றமா? ●

## ஒரு கேள்வி?

பொண்டாட்டி டிவி சீரியல் பார்க்கும்போது நல்லா பசிக்குது, சாப்பாடு போடுன்னு சொன்னேன். உடனே அவளும் வெறும் தட்ட எடுத்துட்டு வந்து வச்சா.. அஞ்சு நிமிஷம் ஆச்சு! பத்து நிமிஷம் ஆச்சு! திடீர்னு என் காலி தட்ட பார்த்துட்டு கேட்ட ஒரு கேள்வி!



சாப்பிட்ட காலி தட்ட எடுத்துட்டு போயி கழுவ போடாம என்ன பன்றீங் கன்னு? நான் அப்படியே ஷாக் ஆயிட்டேன். ●






## வெல்டன் பாய்ஸ்...

வெல்டன் பாய்ஸ் திமுகவை டெபாசிட் கூட வாங்க விடாம பண்ணியாச்சு ●



## தேர்தல் ஆணையம்

ஆர்.கே.நகர் தேர்தலுக்கு 300 சி.சி.டி.வி பொருத்தப்பட்டுள்ளது தேர்தல் ஆணையம். ஒரே ஒரு சிசிடிவி அப்போலோவில் வச்சிருந்தா இந்த இடைத் தேர்தல் வந்திருக்காது ●




## கண்டம் விட்டு கண்டம்

தண்ணியில கண்டம்னு சொல்றது தமிழனுக்கு தான் சரியா வரும் போல. விவசாயி தண்ணியில்லாம சாகுறான், மீனவன் தண்ணிக்குள்ள போய் சாகுறான், மீதிப்பேர் தண்ணியடிச்சே சாகுறான் ●

## எங்கே போவது?

அன்னைக்கு நூறு ரூபாய்க்கு வித்த ஒரு ஓட்டு இன்னைக்கு 10,000 த்துக்கு விக்குது இப்படி கடுமையாக விலைவாசி உயர்ந்தால் நாங்கெல்லாம் அரசியலில் இருப்பதா? இல்ல ஆடு மேய்க்கப் போவதா? ●

## ஆபத்து

உலக அளவில் ஆண்கள் சமைக்கும் உணவே அதிக சுவையானது. ஸ்பெயின் யுனிவர்சிட்டி அறிக்கை இந்த விஷயம் கடுகளவு வெளியே தெரிஞ்சாலும் உயிருக்கு ஆபத்து! ●

## தனி ஒருவனுக்கு ராயல் சல்யூட்



# கார்பரேட்களின் தோலை உரித்த வேலைக்காரன்

தனி ஒருவன் படத்திலாவது மோகன் ராஜா கார்ப ரேட்களை மென்மையாக தாக்கினார். ஆனால் வேலைக்காரன் படத்தில் கடப்பாரையை கொண்டு கார்பரேட்களின் மண்டையில் வன்மையாக தாக்கி இருக்கிறார். என்ன? அடி.

1) சூப்பர் மார்க்கெட்டில் வலது பக்கம் Junk Foods பொருட்கள், அரிசி, பருப்பு போன்ற அத்யாவசிய பொருட்கள் ஒரு மூலையில், பில் போடும் இடத்தில் சாக்லேட் போன்ற பொருட்கள் இது அனைத்திற்கும் பின் உள்ள கார்ப்பரேட் தந்திரங்கள்.

2) Hard Work, Smart Work, Good Work என விதவிதமான ஒர்க்கள் பற்றி பாடம் எடுப்பது,

3) இந்த கூல் ட்ரிங்கில் 8 விட்டமின் இருக்கு என்று ஒருவன் சொல்ல இந்த கூல் ட்ரிங்கில் 12 கெமிக்கல்ஸ் இருக்கு என்று அதற்கு சிவகார்த்திகேயன் சொல்லும் பதில்.

4) மண்டைக்குள் மறைவாக மூளை இருப்பதை போல் இன்று உள்ள மாடர்ன் LCD, LED டிவியின் உள்ளேயே ஹை, லோ வோல்டேஜை தாங்கும் தொழில் நுட்பம் இருக்கிறது. தனியாக அதற்கு ஸ்டெபிலைசரை வாங்குவது போன்ற அனாவசிய செலவுகளை அழகாக மக்களுக்கு புரிய வைப்பது

5) நாம பொருளை விக்கலை, பொய்யை விக்குறோம்

6) 8 மணிநேரம் கார்பரேட்களுக்கு வேலைக் காரனா இருக்கறவன் மீதி 16 மணிநேரம் அதே கார்பரேட்களின் பொருட்களை வாங்குபவனா இருக்கிறான்

7) மாசக் கடைசில அத்தியாவசிய பொருளைக் கூட வாங்க மாட்டான்... ஆனா, மாச ஆரம்பத்துல தேவை யில்லாத பொருளைக் கூட வாங்கிடுவாங்க மிடில் கிளாஸ்

8) நாம பார்க்குற வேலைக்குதான் விஸ்வாசமா இருக்கணும், முதலாளிக்கு இல்ல

9) கலாம் வந்தால் நல்லா இருக்கும், கெஜ்ரிவால் வந்தால் நல்லாயிருக்கும்னு நினைக்கறோம். ஆனால் நம்ப மாறாமல் எதுவும் நடக்காது

10) உலகத்தின் ஒப்பற்ற சொல் செயல்

என இந்த படத்தில் ஒவ்வொரு வசனமும் நறுக்கு, நறுக்குனு இருக்கு.

கார்பரேட்களின் மிகப்பெரிய பலமே சினிமா நடிகர், நடிகைகள் தான். கார்பரேட்களின் பிடியில் உள்ள சினிமா துறையில் இருக்கும் மோகன் ராஜா அவர்கள் தனக்கு பல மிரட்டல்கள் வரும், நம் எதிர்காலம் கூட

கேள்விக்குறி ஆகலாம்,

கார்பரேட்கள் இல்லை என்றால் லட்சக் கணக்கான மக்களின் வேலை வாய்ப்பு போய்விடும் அதன் பின் பல லட்சம் குடும்பங்கள் நடுத் தெருவில் பிச்சை தான் எடுப்பார்கள் என்பதை போன்ற பதிவுகளை மோடி பக்த்ஸ் பதிவு செய்திருந்தார்கள்.

கார்பரேட்களே கூடாது என்று இந்த படத்தில் மோகன் ராஜா அண்ணன் சொல்லவே இல்லை. கார்பரேட்கள் அதிக லாபத்திற்காக உணவில் அதிக அளவில் கெமிக்கல்ஸ் கலப்பதை தான் தவறு என்று சொல்கிறார். பாஜக ஆளும் சிக்கிம் மாநிலம் 100 சதவீத இயற்கை உணவிற்கு மாறி இருக்கு. என்

முகநூல் நண்பர் Ganesa Moorthy Roja போன்றவர்களால் அடுத்து தமிழ்நாட்டிற்கு அருகில் உள்ள பாண்டிச்சேரி மாறி கொண்டு இருக்கு. இதுபோல் இந்தியா முழுவதும் மக்கள் இயற்கை உணவை, ஆரோக்யமான உணவை உண்ணவேண்டும் என்று மோகன் ராஜா மெசேஜ் சொல்வது தவறா?

Ur Anti Indian என்று இந்த படத்தில் சிவகார்த்திகேயன் சொல்வது பாஜகவை மறைமுகமாஅல்ல நேரடியாகவே சீண்டுகிறார் என்பது அனைவருக்கும் தெரியும். அப்படி அவர் சீண்டியும் யக்கா தமிழிசை, ராஜா சார் என அனைவரும் மௌனமாக இருக்க காரணம் மெர்சல் கற்று தந்த பாடம்.

கர்நாடகாவில் ரஜினி படத்திற்கு கூட கிடைக்காத வரவேற்பு தமிழன் சிவகார்த்திகேயனின் வேலைக்காரன் படத்திற்கு கிடைத்திருக்கிறது. கேரளாவில் எதிர் பார்த்ததை காட்டிலும் அதிக வசூல் கூடுதலாக இப்பொழுது கேரளாவில் 30 தியேட்டர்களில் இந்த படம் திரை இடப்பட்டிருக்கு. பல உலக நாடுகளில் இந்த படம் அமோக வரவேற்பை பெற்று இருக்கிறது.

இந்த படம் பார்த்து விட்டு இடைவேளையில் வெளியே வந்தேன். அப்பொழுது ஒருவர் தன்னோடு வந்திருக்கும் 3,4 ஆன், பெண்களுக்கு கோக் கூல் ட்ரிங் வாங்க பார்த்தார். அந்த கூட்டத்தில் ஒரு பெண்மணி. கத்தி, வேலைக்காரன்னு எவ்ளோ படங்கள் பார்த்தாலும் உனக்கு புத்தி வராதா டா. இந்த கூல் ட்ரிங் ல எவ்ளோ விஷம் இருக்கு னு உனக்கு தெரியுமா என்று அந்த பெண் கத்த உடனே அந்த இளைஞர் கோக் வாங்குவதை நிறுத்தினார். அந்த பெண்மணி போட்ட சத்தத்தை கேட்டு அந்த கூல் டிரிங்கை வாங்க நினைத்த மேலும் 3,4 பேர் அப்படியே ரிவர்ஸ் எடுக்க கோக் கவுண்டரில் நின்று கொண்டிருந்த அந்த பேக் பேந்த, பேந்த முழிக்க அது பார்ப்பதற்கே கண்கொள்ளா காட்சியாக இருந்தது.

நான் கூட இந்த படத்தை கார்பரேட்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் வேளச்சேரி பீனிக்ஸ் மாலில் தான் பார்த்தேன். ஆனால் சாப்பிட்டது Lux தியேட்டர் உள்ள அதே Second Floor ரில் இருக்கும் வசந்த பவனில்.

Kfc, Dominos, Mainland China போல் விஷங்களை உணவாக விக்கும் உணவகங்கள் ஈ ஓட வசந்த பவனில் கூட்டம் அலை மோதியது. சீட்டுக்காக பலர் வெளியே நின்று காத்து கொண்டிருக்கிறார்கள்.

இத்தனை லட்சம் மக்களை இயக்குனர் மோகன் ராஜா அவர்கள் சிந்திக்க வைத்திருக்கிறார் என்றால் அது சாதாரண விஷயம் இல்லை. மிக, மிக அசாதாரண விஷயம்.

உங்கள் மனைவியார் எப்பப்பாரு டிவியில் வரும் விளம்பரங்களை பார்த்து கண்ட,கண்ட பொருட்களை வாங்குகிறார்களா? நீங்கள் எடுத்து சொன்னாலும் கேட்பதில்லையா. அதனால் ஒவ்வொரு மாதமும் கூடுதலாக 5,6 ஆயிரம் ரூபாய் உங்களுக்கு செலவு வருகிறதா ரொம்ப சிம்பிள். வேலைக்காரன் படத்திற்கு உங்கள் மனைவியை அழைத்து செல்லுங்கள். வெறும் 240 ரூபாய் டிக்கெட் செலவு போக்குவரத்து இன்டெர்வல் நொறுக்கு தீனி என அனைத்தையும் சேர்த்து ஒரு 500, 600 ரூபாய் ஆகுகிறது என்று வைத்து கொள்ளுங்கள். அதன் பின் உங்கள் மாச பட்ஜெட்டில் கூடுதலாக செலவாகும் 5,6 ஆயிரம் செலவு மிச்சம் ஆக அதிக வாய்ப்பு இருக்கு.

மொத்தத்தில் வேலைக்காரன் ஒரு மிக சிறந்த படம் + பாடம். மற்றும் நமது அனாவசிய செலவுகளில் இருந்து நடுத்தர குடும்பங்களை காக்கும் ஒரு ரட்சகன் இந்த வேலைக்காரன்.

ஒரு தனி நபர் ஒரு மாதத்திற்கு அனாவசியமாக செய்யும் தேவையற்ற செலவு 2ஆயிரம் தமிழ் நாட்டில் உள்ள மக்கள்தொகை 8 கோடி. அப்ப 2 ஆயிரம் X 8 கோடி போட்டால் மாதத்திற்கு 16 ஆயிரம் கோடி. ஒரு ஆண்டுக்கு 1.92 லட்சம் கோடி.

ஆக சுமார் 5 வருடத்தில் நடுத்தர மக்கள் பாடுபட்டு சம்பாதிக்கும் 9.60 லட்சம் கோடி பணத்தை கார்பரேட்கள் திட்டமிட்டு கொள்ளையடிக்கிறார்கள் என்று மோகன் ராஜா இந்த படத்தில் அழுத்தமாக சொல்லி இருக்கிறார். இவரின் இந்த மெசேஜ் 8 கோடி மக்களையும் சென்றடைந்தால் வீணாகும் நடுத்தர மக்களின் பணம் அவர்களுக்கு சேமிப்பாகும். அந்த சேமிப்பே நம் நாட்டை வல்லரசாக்கும், நல்லரசாக்கும்.

**- ஆசிரியர்**



# ஜெயலலிதா ஒரு எடுத்துக்காட்டு!

ஜெ வால் தன்னுடன் எதையுமே எடுத்துச் செல்ல முடியவில்லை.

ஆம்..! சர்வ வல்லமை பொருந்திய அதி காரத்தின் உச்சத்தில் இருந்தவர். இன்று வெறும் நமது நினைவுகளில் மட்டுமே இருக்கிறார்.

**ஆடி அடங்கும் வாழ்கையடா.....**
**ஆறடி நிலமே சொந்தமடா.........**

என்று ஒரு ஆறடி மண்ணில் புதைக்கப்பட்டு மறைந்து விட்டார். அவர் வாழ்நாளில் பவனி வந்த விலையுயர்ந்த கார்களில் அவரது உடல் செல்லவில்லை.

அரசு மரியாதையான பீரங்கி வண்டியில் தான் அவரது உடல் எடுத்துச் செல்லப்பட்டது. வெறும் கையுடன் சொந்தமாக வாங்கிய வாகனங் களில் அல்ல. நல்ல வழியிலோ அல்லது வேறு வழிகளிலோ சம்பாதித்த செல்வங்களை யாரோ அனுபவிப்பதற்காக விட்டு விட்டு சென்று விட்டார்.

- *1197 ஏக்கர் நிலம் திருநெல்வேலியில்,*
- *200 ஏக்கர் வாலாஜாப்பேட்டையில்,*
- *100 ஏக்கர் ஊத்துக்கோட்டையில்,*
- *25 ஏக்கர் சிறுதாவூரில்,*
- *300 ஏக்கர் காஞ்சீபுரத்தில்,*
- *14.5 ஏக்கர் திராட்சைப் தோட்டம் - ஜீடிமெட்லா (ஆந்திராவில்),*
- *1600 ஏக்கர் தேயிலைத் தோட்டம்.....*
- *ஒரு பங்களாவுடன் கொடநாடு, நீலகிரி மலையில்*

*இவை தவிர சென்னையில் போயஸ் தோட் டத்தில் 24,000 சதுர அடியில் கட்டப்பட்ட 100 கோடி மதிப்புள்ள (வேதா நிலையம்) பங்களா,*

- *4 வணிக வளாகங்கள்,*
- *800 கிலோ வெள்ளி,*
- *28 கிலோ தங்கம்,*
- *750 ஜோடி காலணிகள்,*
- *10,500 புடவைகள்,*
- *91 விலையுயர்ந்த கைக்கடிகாரங்கள்,*

இவை தவிர பல வாகனங்கள், சொகுசு கார்கள். இந்த கணக்கில் பினாமி சொத்துக்கள் இல்லை. இது தான் வாழும் மனிதர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய அத்தியாவசிய பாடம்.

மேலிடத்திலிருந்து அழைப்பு வந்து விட்டால், சுற்றம் நட்பு என்று யாருக்கும் விடைபெறுகிறேன் என்று சொல்லக்கூட நேரமிருக்காது.

யாராலும் அந்தப் பயணத்தை தடுத்து நிறுத்த முடியாது.

கோடானு கோடி உடன் பிறவாத சகோதர சகோதரிகளாகட்டும், ஆதரவாளர்கள் ஆகட் டும், உலகின் தலை சிறந்த மருத்து நிபுணர்கள் ஆகட்டும். யாராலுமே தடுத்து நிறுத்த முடியாத ஒரு பயணம் நம் எல்லோருக்கும் காத்தி ருக்கிறது.

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்ன?

நல்ல வழியிலோ, அராஜகமான. தவறான வழிகளிலோ, அடுத்தவர்களை ஏமாற்றி, காயப் படுத்தி சம்பாதித்தத பணம், நகை, சொத்து. எல்லாவற்றையும் விட்டுவிட்டுத்தான் செல்ல வேண்டும். இவ்வுலகைவிட்டு செல்லும் போது சிலருக்கு வாய்க்கரிசியோ. கடைசி சொட்டு தண்ணீரோ அல்லது ஈமச்சடங்குகளோ, ரத்த சொந்தங்கள் இருந்தும் செய்ய முடியாது, கிடைக்காது.

ஆகையால் அகந்தையை ஒழித்திடுவோம், நாம் யார் என்பதை உணர முயற்சி செய்வோம், வாழும் கடைசி நிமிடம் வரை நல்லவர்களாக அடுத்தவர்களை மதித்து பயனுற வாழ்வோம்.

**- வ.சங்கர்**

HAPPY NEW YEAR

# 2018

# புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்..

நம் அனைவரின் வாழ்விலும் அன்பையும், மகிழ்ச்சியையும் நோய் இல்லாத வாழ்வையும் குறைவில்லாத செல்வத்தையும் கொடுக்கும் ஒரு புதிய புத்தாண்டாக மலர வாழ்த்துக்கள்!

உலகின் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாள் கொண்டாடும் நம் தமிழர்களின் பண்டிகை, நாளும் நட்சத்திரமும் தாண்டி நாம் அனைவரும் தமிழர்கள் என்பதில் பெருமிதம் கொள்வோம் !

இந்த ஆண்டு நம் வாழ்வில் எல்லாவிதமான வெற்றியையும் அன்பையும் சகோதரத்துவத்தையும் அள்ளி கொடுத்து. தமிழர் நாம் ஒன்றாகி வென்றாக வேண்டுமென்று இறைவனை வேண்டி வாழ்த்துகின்றன்.

**அன்புடன்**

**முனைவர் ஆ.மவுரியன்**

ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் - மக்கள் விசாரணை & அருணைமுரசு




வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

**மக்கள் விசாரணை**®

மக்களின் மனக்குமுறல்

**லஞ்ச ஊழல் விழிப்புணர்வு**

ஆண்டு-6 ஜனவரி-2018 இதழ்-8

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன் (பி) லிட்., சார்பாக வெளியிடுபவர் ஆசிரியர்

முனைவர் **ஆ. மவுரியன்,** B.A.,Dip. Journilisam,

• ஆசிரியர் குழு

முனைவர் **காசி. அரங்கநாதன், A. காதர் மொய்தீன், V. அருணாச்சலம், A.C. குமார்**

• நிர்வாக ஆசிரியர்

**வீ. வடிவேல்,** B.B.A.,

• துணை ஆசிரியர்கள்

**ஆர்.ஆர். சண்முகவேல், கே. ரமேஷ்குமார், எஸ். சரவணன், பி. மாரிமுத்து, D. ரவி, வீரஆறுமுகம், கே.பாலாஜி, அ.மு.ரமணாத்திரி**

• முதன்மை செய்தியாளர்கள்

**S. ராம்குமார்** சேலம் **M. சத்தியராஜ்,** நாமக்கல்.
**A. பாலகிருஷ்ணன், செந்தில்குமார்,** கோவை,
**R. ஜெயா, K. ஷமீம் ஷகிலா, P. சாந்தா,** தென்சென்னை
**யு. அக்ரம்கான், சுக்கூர்கான்,** கிருஷ்ணகிரி.
**பா. சுப்பிரமணியன்,** திருநெல்வேலி. **நாகராஜ்,** மூணாறு.
**மாரிமுத்து,** உளுந்தூர்பேட்டை, **சுசீ ஈஸ்வர்,** தென்காசி.
**ராமசுப்பிரமணியன்,** ராஜபாளையம். **சிலம்பரசன்,** தர்மபுரி,
**வெங்கடேசன்** தி.மலை **S. ரமேஷ், அ. சிவராமன்,** காஞ்சிபுரம்.

• நிருபர்கள்

**எம். நிவேதிதா, இர்வின், கனகதுர்கா, வ. சங்கர் அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின், ஏழுமலை, பிரவின், ஞானவேல், சத்தியமூர்த்தி, சதீஷ்குமார்**

• சட்ட ஆலோசகர்கள்

**M. குணசீலன்,** B.Com.,M.L.,
**M. சுதாகர்,** B.Sc.,B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை.)

• புகைப்பட நிருபர்கள் :

**M. சந்தோஷ்சிவன், K. மணிவண்ணன்**

• இதழ் வடிவமைப்பு : **AKS Creative's**



அலுவலகம் :

**மக்கள் விசாரணை**

நெ.21/12, 2-வது சந்து, நடராஜ் பில்டிங் முதல் மாடி, ஜார்ஜ் டவுன், சென்னை - 600 001.

Email : writermouriyan@gmail.com

news@makkalvisaranai.com / www. makkalvisaranai.com

**Cell : 93821 33334 / 93821 44446**



**Press & Registration of Book Act-in** ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

# தவம்

ஒருநாள் அந்த நாட்டின் மன்னனுக்கு கடவுளின் தரிசனம் கிடைத்தது! பெரும் மகிழ்ச்சி அடைந்த மன்னன் கடவுளிடம் ஒரு வரம் கேட்டான்.

கடவுளும் என்ன வரம் வேண்டுமோ கேள் என்று மன்னனிடம் சொல்ல..

எப்படி நீங்கள் எனக்கு தரிசனம் தந்தீர்களோ, அதே போல ராணியாருக்கும், மந்திரி மற்றும் அரச குடும்பத்தினருக்கும், நாட்டின் மக்கள் அனைவருக்கும் நீங்கள் காட்சி தர வேண்டும் என்று ஆவலான வரத்தை கேட்டான்.

இது அவரவர்களின் கர்ம வினையைப் பொறுத்தே அமையும். இருந்தாலும், மன்னன் வரத்தை கேட்டுவிட்டதால் கடவுளும் அதற்கு சம்மதித்தார்.

"அதோ தெரிகின்றதே ஒரு உயர்ந்த மலை, அங்கே அனைவரையும் அழைத்துக்கொண்டு வா காட்சி தருகின்றேன்" என்று சொல்லி மறைந்தார். மன்னனும் நாட்டில் அனைவருக்கும் தண்டோரா போட்டு அரச குடும்பத்தினருடனும் மக்களுடனும்.. மலையை நோக்கி புறப்பட்டான்.

அனைவரும் கடவுளை காணும் ஆவலில் மலையேற துவங்கினர். சிறிது உயரம் சென்றவுடன் அங்கே செம்பு பாறைகள் தென்பட்டன, உடனே, மக்களில் நிறைய பேர் செம்பை மடியில் கட்டிக் கொண்டு சிலர் பாறைகளை உடைத்து தலையில் வைத்துக் கொள்ளவும் ஆரம்பித்தனர்.

மன்னன் "அனைவருக்கும் கடவுளின் காட்சி கிடைக்க போகின்றது இதெல்லாம் அதற்கு முன்னால் ஒன்றுமே இல்லை அனைவரும் வாருங்கள்" என்று உரக்க சப்தமிட்டான். அதற்கு "மன்னா இப்பொழுது இதுதான் தேவை கடவுளின் காட்சியை வைத்து என்ன செய்வது" என்று ஒட்டு மொத்தமாக கூட்டத்தில் குரல் எழும்பியது. எப்படியோ போங்கள் என்று மீதி இருப்பவர்களை அழைத்துக் கொண்டு மலையேறத் துவங்கினான் மன்னன்.

மலையின் சில மைல் தூரத்தை கடந்தவுடன், அங்கே வெள்ளியிலான பாறைகளும், வெள்ளி துண்டுகளும் நிறைய இருந்தன. அதை பார்த்த கொஞ்சம் மீதி இருந்த மக்கள் ஓடிச்சென்று வெள்ளி துண்டுகளை மூட்டை கட்ட ஆரம்பித்தனர். மன்னன் மறுபடியும் மக்களுக்கு உரக்க சொன்னான். "விலைமதிக்க முடியாத கடவுளின் காட்சி கிடைக்க போகின்றது. அதற்கு முன்னால் இந்த வெள்ளிக்கட்டிகள் எதற்கு பயன்பட போகின்றன" என்று உரைத்தான்.

மன்னா இப்பொழுது கடவுளின் காட்சியை விட, வெள்ளிக் கட்டிகளே பிழைப்புக்கு உதவும் என்று சொல்லிக் கொண்டே மக்கள் முடிந்த அளவு அள்ள துவங்கினர். உங்கள் தலையெழுத்து என்று சொன்ன மன்னன்.

மீதி இருந்த ராஜ குடும்பத்தினரோடு மலையேற ஆரம்பித்தான். இப்பொழுது சிறிது தொலைவில் தென்பட்டது தங்கமலை ராஜகுடும்பத்தினர் பாதி பேர் அங்கே சென்றுவிட மீதி இருந்தவர்கள் ராணியும் மந்திரியும், தளபதியும், மற்றும் முக்கியமானவர்கள் மட்டுமே!

சரி வாருங்கள் செல்வோம் என்று மீதி இருந்தவர்களை அழைத்துக்கொண்டு, முக்கால் வாசி மலையை கடந்திருப்பான் மன்னன் அங்கே தென்பட்டது வைரமலை.! அதைப்பார்த்த ராணி முதற்கொண்டு அங்கே இருந்தவர்கள் ஓடிவிட மலையின் உச்சியில் தன்னந் தனியாக போய் நின்றான் மன்னன்.....!!!

கடவுள் மன்னன் முன் தோன்றி "எங்கே உன் மக்கள்" என்றார்.....!!



மன்னன் தலை குனிந்தவனாக "அவர்களது வினைப்பயன் அவர்களை அழைத்து சென்றது அய்யனே! என்னை மன்னியுங்கள்" என்றான் மன்னன்.

அதற்கு கடவுள், "நான் யாராக இருக்கின்றேன் எப்படி இருக்கின்றேன் என்று கோடியில் ஒரு சிலரே அறிவார்கள். அப்படிபட்டவர்களுக்கே எமது காட்சி என்பது கிட்டும்.....!!

உலக இச்சைகள் என்ற சேற்றை பூசிக் கொண்டவர்கள் சிலருக்கு, உடல், செல்வம், சொத்து என்ற செம்பு, வெள்ளி, தங்கம், வைரம் போன்ற ஏமாற்றும் மாயைகளில் சிக்கிக் கொண்டுள்ளனர். இவற்றையெல்லாம் கடந்து இச்சையற்ற நிலையில் இருப்பவரே எம்மை அடைவர் என்று சொல்லி விண்ணில் மறைந்தார் கடவுள்.

**- ஆர்.ஜெயா**




13-12-2017 அன்று மதுரை காமராஜர் பகல்கலைக் கழகத்தில் எழுத்தாளர்கள், படைப்பாளர்களுக்கான விருது வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் மக்கள் விசாரணை இதழின் ஆசிரியர் முனைவர் ஆ. மவுரியன் எழுதிய ஓர் இரவு தப்பிவிட்டான் என்ற நூலிலிருந்து எமலோகத்தில் உதவி இயக்குநர் என்ற சிறுகதையை தேர்ந்தெடுத்து பாராட்டி "சிந்தனை சிகரம்" என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவ்விழாவிற்கு ஆசிரியர் சார்பாக மக்கள் விசாரணை இதழின் நிர்வாக ஆசிரியர் வீ.வடிவேல் அவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பெற்றுக் கொண்டார்.


# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்**
**துடிப்பான, உண்மையை வெளிக்கொணர**
**சேவை மனப்பான்மையுடன்**
**பணியாற்ற மாவட்ட வாரியாக**

## ஆண்/பெண் நிருபர்கள் தேவை

தொடர்புக்கு

## மக்கள் விசாரணை ✷ அருணை முரசு

## Cell : 93821 33334 / 93821 44446

**Email : writermouriyan@gmail.com**




# சன்பார்மாவால் ஊனமான கிராம மக்கள் கண்டு கொள்ளாத தமிழக அரசு!

தமிழக அரசின் அலட்சிய நிர்வாகத்தால் சன்பார்மா என்ற தனியார் நிறுவனத்தின் செயல்பாட்டினால் இப்பகுதிமக்களின் சுற்றுப்புறச் சூழல், சுகாதாரம், குடிநீர், விவசாயம், கால்நடை சீரழிவு, வனங்களின் பாதிப்பு, ஊர்வன, பறப்பன மற்றும் தொற்று நோயினால் இப்பகுதி சிறுக, சிறுக சீரழிந்து வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், 33 சாத்தமை கிராமத்தில் கள்ளபிரான்புரம் பாதுகாக்கப்பட்ட வனசரக மலையின் மேற்கு 1985-ல் பிரதீப் தனியார் நிறுவனமாக இருந்து வருகிறது. இந்நிறுவனத்தின் செயல்பாட்டால் இதன் சுற்றுப்புறப் பகுதியில் உள்ள பத்து கிராமங்களில் மேலே குறிப்பிட்ட வகையில் திட, திரவ வாயுவினால் சுற்றுப்புறச்சூழல் மாசு ஏற்பட்டு சுகாதாரம் குடிநீர், ஏரி, கிணறு, விவசாய பாசன நீர், வன வளம், ஊர்வன பறப்பான அனைத்தும் அழிந்துவிட்டது. பொதுமக்களும் தாங்க முடியாத துயரத்தால் பல ஜீவாதார உரிமைகள் பாதிப்படைந்து பலர் வெளியூர் குடிபெயர்ந்து சென்று தன் குடும்ப வாழ்க்கையை நடத்தி வருகிறார்க்ள.

அருகாமையில் உள்ள கருங்குழி கிராமம் உள்ளது. அந்த கிராமத்தில் பிறக்கும் குழந்தைகள் ஊனமுடனும், மனநிலை சரியில்லாமலும் பிறக்கிறது. புதிய திருமணமானவர்களுக்கும் கருச்சிதைவுகள் அதிகமாக ஏற்படுகிறது. இதனால் பெண்கள் தாய்மை அடைவது என்பது மிகவும் குறைந்துவிட்டது.

விவசாயம், வெற்றிலைப் பயிர் தோட்டங்கள் முற்றிலும் அழிந்து பூமி பாலைவன பூமியாக காட்சியளிக்கிறது. மக்கள் விசாரணை நிருபர்கள் குழு இங்கு நேரில் சென்று விவசாய நிலங்கள் மற்றும் கால்நடைகள் இவைகளைப் பற்றி விசாரணை மேற்கொண்டது. அதில் பல



திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

கிராம மக்களிடம் குறைகளைக் கேட்டபோது ஒட்டுமொத்த கிராம மக்களும் அழிவின் உச்சி யிலிருந்துதான் வாழ்கிறார்கள். உயிரைக் காக்கக் கூடிய நீர் உயிரைப் பறிப்பதாக அஞ்சி குடிநீருக் காக அவர்கள் பல கிலோ மீட்டர் தூரம் நடக்க வேண்டியுள்ளது. ஆனால் நீர் நிலைகள் அனைத்தும் வளமாக இருந்தாலும் அது விஷமாக இருப்பதுதான் அதிர்ச்சியாக இருக்கிறது.


மேலும் அந்த கிராம மக்கள் உண்மைகளைக் கூற ஆரம்பித்தனர். அதிகாரிகளின் அலட்சியத்தால் எங்கள் வாழ்க்கையின் எதிர்காலங்கள் அழிவின் கடைசி நிலைக்கு வந்துவிட்டதாகக் கூறினார்கள்.

1989ஆம் ஆண்டு சத்திம்மலையில் அருகா மையில் சன்பார்மா நிறுவனம் தொடங்கப்பட்டது. இந்த நிறுவனம் முற்றிலும் கெமிக்கல் மருத்து வத்திற்கு சம்பந்தமான பொருட்கள் தயாரிக்கும் நிறுவனமாக நிறுவப்பட்டது. இந்த நிறுவனம் தொடங்கப்பட்ட முதல் வருடத்திலேயே மக்க ளுக்கு அதிகமான பாதிப்புகள் தெரியத் தொடங் கியது.

சன்பார்மா தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்கு 2000 லிட்டர் 6000 லிட்டவரை கழிவு நீர்களை முற்றிலும் திறந்து விளை நிலங்களில் வெளி

யேற்றப்படுகிறது.

தொழிற்சாலையில் வெளிவரும் புகையினால் மரங்கள், செடிகள், விவசாயப் பயிர்கள் செத்து மடிந்து துர்நாற்றம் வீசுகிறது. மக்கள் என்ன செய்ய வேண்டுமென்று தெரியாமல் மரண பயத்தில் தவித்தார்கள்.



கழிவு நீர்கள் விவசாய நிலங்களில் முற்றிலும் பாதிப்பை ஏற்படுத்தியும் கிராம மக்கள் ஒன்றிணைந்து காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து சன்பார்மாக நிறுவனத்தை மூடக் கூறி 2000 மேற்பட்டோர் கள் சேர்ந்து மனுவை அளித்தனர். அதற்கு மாவட்ட ஆட்சியர் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று மக்களுக்கு உறுதி அளித்திருக்கிறார். அந்த உறுதிமொழி காற்றில் விடப்பட்டது.

மக்கள் மீண்டும் தங்களை ஒன்று திரட்டி மாவட்ட ஆட்சியரின் முகத்திரையை கிழிக்க பலப் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தி யும் பயனில்லை. பல உண்ணாவிரதப் போராட் டத்தையும் நடத்தியிருக்கிறார்கள்.

அரசியல்வாதிகளின் முழு ஒத்துழைப்புடன் அந்த நிறுவனம் மூடாமல் மக்களை இன்று வரை ஏமாற்றி அவர்களின் வாழ்வாதாரத்தை அழித்து வருகிறார்கள்.

விவசாயம் என்ற சொல்லிற்கும் வெற்றிலை சாகுபடிக்கும் தமிழகத்தின் தாயகம் என்ற பெயரில் இருந்த கருங்குழி இன்று படுகுழியில் விழுந்துவிட்டது.

### ஏரி, குளங்கள் பாதிப்பு

சன் பார்மா நிறுவனத்தில் வெளியேறும் கழிவு நீர் தொட்டிகளில் சேகரித்து அந்த நீரை மழைக் காலங்களில் திறந்துவிட்டு மழை நீரோடு நீராக கலந்துவிடுகிறார்கள். இதனால் அந்த கழிவு நீர் பூமியில் பரவுவதால் விவசாயம் முற்றிலும் அழிந்துவிட்டது.

நீர்நிலைகளில் கலந்து குடிநீர் முற்றிலும் விஷத்தன்மையாக மாறிவிட்டது. மிகப்பெரிய பனைமரம், மா மரம் போன்ற மரங்களும் அழுகி வேரோடு சாய்ந்து விடுகிறது.

அகரவரம் ஏரி, சத்திம் ஏரி, கன்னிக்கோயில் கிணறு மற்றும் பல குளங்கள் கணக்கில் அடங்காத அளவிற்கு மாசுபட்டுவிட்டன. காஞ் சிபுர மாவட்டத்தில் மிகப்பெரிய ஏரியான மதுராந்தகம் ஏரியும் இதில் பாதிக்கப்பட்டுள்ளது.

மழை நாட்களில் மழை நீருடன் சேர்த்து கழிவு நீரும் இணைந்து சுமார் 2500 ஏக்கர் நிலங்களை அழித்துவிட்டது சன்பார்மா நிறுவனம்.

கழிவு நீர் தண்ணீர் ஊற்றா கவும் சுரக்கிறது. நிலத்தடி நீர் முற்றிலும் கெமிக்கல் நீராக மாறி-விட்டது. பூமியின் தன்மையும் முற்றிலும் மாறிவிட்டது. மதுராந் தகத்தின் தண்ணீர் 18 கிராமத் திற்கும் விவசாயத்திற்கும் கால் நடைகளும் உயிர் ஆதாரமாக இருக்கும் இந்த ஏரிக்கு இன்னும் கணக்கில் அடங்காத அளவிற்கு மக்களின் உயிரைப் பறித்து விட்டது.

தமிழக அரசு மக்களின் வாழ்வாதாரத்தை எந்த வகையில் காப்பாற்றும் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் கேள்விக்குறியாகிவிட்டது.

ஊராட்சித் தலைவர்கள், அரசு அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர், காவல்துறை அதிகாரிகள், பத்திரிகைள் போன்ற இத்தனை அதிகாரிகள் இருந்து இந்த பேரழிவிற்கு இன்னும் விடிவு கிடைக்கவில்லை என்பதுதான் இந்த இருபதாம் நூற்றாண்டின் வேடிக்கையாக இருக்கிறது.

இவர்கள் அத்தனைபேரும் சன்பார்மா நிறுவனம் தரும் கரன்சிகளுக்கு உடந்தையாக இருப்பதால்தான் தொழிற்சாலைச் சுற்றியுள்ள கிராமங்களும், விவசாயங்களும் முற்றிலுமாக அழிந்து விட்டது. சன்பார்மா பெரிய அளவில் வளர்ந்துவிட்டது. பூமியின் நிலையையும், மக்களின் நிலையையும் அறிந்து இதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன் வரவில்லை.

மனுக்கள் அளிக்கும் மக்களின் செயலுக்கு அவர்களின் ஆதரவு அளித்திருந்தால் மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர், கிராம நிர்வாகி மற்றும் உயர் அதிகாரிகளும் அந்த நிறுவனத்திற்கு நட்புக் கரமாக இருக்க ஆசைப்படுவதால் அவர்களின் சுய ஆதாயத்திற்காக மக்களின் வாழ்நாட்கள் எண்ணப்பட்டு வருகிறது என்பது வேதனைக்குரிய செய்தி.

மக்களின் வாழ்வாதாரமும் இயற்கையின் வாழ்வாதாரமும் மலர, இதுபோன்ற அழிவிற்கு காரணமாக இருக்கும் தொழிற்சாலைகளை தடை செய்ய வேண்டுமென்பதே சமூக ஆர்வலர்களின் கருத்தகா உள்ளது.

**மக்களின் வாழ்வாதாரம் மலருமா?**
**என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்..**

– A.C.குமார்

முனைவர் ஆ.மவுரியன்

# ராணி வேலுநாச்சியார்

தொடர்-3





வீரத் தமிழச்சிகளின் வரலாறு..!

உடனே கம்பெனியாரும், நவாப்பும் தங்கள் படைகளை சிவகங்கைக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தனர்.

*29-04-1789*ம் தேதி தளபதி ஸ்டுவர்ட் தலைமையில் கம்பெனிப் படை, திருப்புத்தூர் கோட்டைக்கு வந்து சேர்ந்தது.

*8-05-1799*ம் தேதி புதுக்கோட்டைத் தொண்டமானின் மூவாயிரம் வீரர்களிடங் கிய படையும் சிவகங்கை வந்து சேர்ந்தது. பின்னர் இராமநாதபுரத்திலிருந்து தளபதி மார்ட்டின் தலைமையில் வந்த கம்பெனிப் படையும் அவர்களுடன் சேர்ந்து கொண்டது.

தளபதி ஸ்டுவர்ட் ராணி வேலுநாச்சி யாரைச் சந்தித்துப் பேசினார். ஆங்கிலத் தளபதி தனது படை வீரர்களுடன் *13-05-1799*ல் கொல்லங்குடியைத் தாக்கினார். மருது சகோதரர்கள் அங்கு திரண்டிருந்த தனது ஆதரவாளர்களின் உதவியுடன் துப்பாக்கிகளைப் பயன் படுத்தி கம்பெனிப் படையை எதிர்த்துப் போரிட்டனர்.

கம்பெனிப் படையின் கடுமையான தாக்குதலைச் சமாளிக்க முடியாமல், மருது சகோதரர்கள் ராம மண்டலம் என்ற காட்டுப் பகுதிக்குப் பின் வாங்கினர். கொல்லங்குடிக்கோட்டை கம்பெனி தளபதி ஸ்டுவர்ட்டின் கைவசமானது.

*19-05-1789*ல் ராணி வேலுநாச்சியார், தளபதி ஸ்டுவர்டிற்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் ஆங்கிலேயர்களும், ஆற்காடு நாவப்பும் சிவகங்கைச் சீமை பொறுப்பை தான் ஏற்றுக் கொள்வதற்குத் தனக்கு உதவி செய்ய வேண்டுமென்று அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

ராணி எழுதிய கடிதத்தை தளபதி ஸ்டுவர்ட் *21-05-1789*ல் சென்னை கவர் னருக்கு அனுப்பி வைத்தார். தளபதி ஸ்டுவர்ட் தலைமையில் கம்பெனிப் படைகள் முன்னே றிச்சென்று மருது சகோதரர்களது படை களைத் துரத்தி அடித்தன. அடுத்த ஐந்து மாதங்கள் சிவகங்கைச் சீமையில் அமைதி நிலவியது. கம்பெனிப் படைகள் சிவகங்கைக் கோட்டையில் பாதுகாப்பிற்குக் காவல் இருந்தன.

ஐந்து மாதங்களுக்குப் பிறகு மருது சகோதரர்கள் மைசூர் மன்னர் திப்பு சுல்தானின் உதவியைப் பெற்று, திண்டுக்கல் பகுதியிலிருந்து தனது படைகளைத் திரட்டிக்

கொண்டு வந்து, திருப்புத்தூர் கோட்டை யைக் கைப்பற்றிக் கொண்டனர். மருது சகோதரர்களுடன் தான் போரைத் துவக்கி னால், கி.பி. 1783ல் மைசூர் மன்னர் திப்பு சுல்தானுடன், தான் செய்து கொண்ட உடன் படிக்கையை மீறிய செயலாகும் என நவாப் கருதினான். எனவே மருது சகோதரர்களுடன் ஓர் உடன்பாடு செய்து கொள்ளுமாறு நவாப்பை கம்பெனித் தலைமை கேட்டுக் கொண்டது.

அந்த ஆலோசனையை நவாப்பும் ஏற்றுக் கொண்டான். சக்கந்தி வேங்கை பெரிய உடையத் தேவரின் மனைவி வெள்ளச்சி நாச்சியார், துரதிஷ்டவசமாக வேலுநாச்சியா ருக்கு முன்னரே மரணமடைந்துவிட்டார். எனவே, சிவகங்கைச் சீமையில் சுமுகமான ஆட்சி மாற்றமும், நிர்வாகமும் ஏற்படும் வகையில்ஆற்காடு நாவபும், கம்பெனித் தலைமையும் சில ஆலோசனைகளை ராணிக்கு வழங்கினார்கள்.



ராணி வேலுநாச்சியார் சிவகங்கைச் சீமையின் அரச பதவியிலிருந்து விலகுவ தென்றும், அவருக்குப் பதிலாக சிவகங்கை மன்னராக வேங்கை பெரிய உடையணத் தேவர் பதவி ஏற்பதென்றும், மருது சகோதரர்கள் பிரதானியாகவும், தளபதி யாகவும் பதவியேற்பதெனவும் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டது.

ராணி வேலுநாச்சியார் இந்த சமரசத் திட்டத்தை தனது அரச பதவியைப் பறிப் பதற்கான சதித் திட்டமெனக் கருதினார். எனினும், தனது மருமகன் வேங்கை பெரிய உடையணத் தேவர், தனக்குப் பதிலாகச் சிவகங்கைச் சீமையின் மன்னராகப் பதவி யேற்கவிருப்பதால், வேலுநாச்சியார் இந்த சமரச உடன்பாட்டை வேலுநாச்சியார் இந்த சமரச உடன்பாட்டை ஏற்றுக்கொண்டார். மருது சகோதரர்களும் இந்த உடன்பாட்டை வரவேற்றனர். ராணி வேலு நாச்சியாரின் பத்தாண்டு கால ஆட்சி 1789ம் ஆண்டு டிசம்பரில் முடிவுற்றது.

1800ம் ஆண்டு வேலுநாச்சியார் இம்மண் ணுலகை விட்டுமறைந்தார்.

வீரநங்கை வேலுநாச்சியாரை (velu nachchiyar) 'இந்தியாவின் ஜோன் ஆஃப் ஆர்க்" என அழைக்கலாம். 'வெள்ளையருக்கு எதிராக வாளெடுத்து வீரப்போர் புரிந்த 'முத்து வடுகநாதரின் மனைவி - வீரமங்கை வேலுநாச்சி - அன்று நடத்திய சிறப்பு வாய்ந்த வீரப்போர் வாயிலாக 'வேங்கடத்திற்கு வடக்கே ஒரு ஜான்சி ராணி தோன்றுவதற்கு இரு நூற்றாண்டுகட்கு முன்பே தமிழகம் தன் ஜான்சி ராணியைக் கண்டுவிட்டது" என்று வரலாற்று ஆசிரியர்கள் போற்றும் படி செய்துவிட்டாள் என்று வரலாற்றுப் பேராசிரியர் திரு. ந. சஞ்சீவி அவர்கள் 'மருதிருவர்" என்ற தனது நூலில் குறிப்பிடு கின்றார்.

மேலும் அதே ஆசிரியர் வீரமங்கை வேலுநாச்சியை 'தமிழகத்தின் ஜான்சி ராணி" என்று போற்றுவதைவிட ஜான்சி ராணியை 'வடநாட்டு வேலுநாச்சி" என்று புகழ்வதே சாலப் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது" என்று வேலு நாச்சியாரைப் பற்றி சிறப்பாகப் புகழ்ந்து கூறியுள்ளார்.

**- நன்றி மற்றுமொரு தமிழச்சி வரலாற்றில் சந்திப்போம்...**

# முக்கிய அறிவிப்பு


ஆ.தே.முருகையன்
திருவண்ணாமலை


A. பாலசந்தர்
காஞ்சிபுரம்


சமயசெல்வம்
மதுரை

நமது மக்கள் விசாரணை பத்திரிகையில் பணிபுரிந்து வந்த திருவண்ணாமலை மாவட்ட செய்தியாளர் **ஆ.தே.முருகையன்,** மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட செய்தியாளர் **A. பாலசந்தர்,** மதுரை மாவட்ட செய்தியாளர் **சமயசெல்வம்** ஆகிய மூன்று நபர்களை 30-12-2017 அன்று முதல் அடிப்படை நிலையிலிருந்தும் அவர்கள் வகித்து வந்த பொறுப்புகளிலிருந்தும் நீக்கம் செய்து அவர்களுக்கு வழங்கிய பணி நியமன ஆணையை ரத்து செய்யப்படுகிறது.

மேலும் மாவட்ட மக்கள் செய்தி தொடர்புத்துறை, காவல்துறை ஆய்வாளருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தந்த மாவட்ட, மற்ற மாவட்ட செய்தியாளர்கள் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் தமிழ்செல்வி, ஜான்சுந்தர், புஷ்பலதா, மணிகண்டபிரபு, (மதுரை)
எஸ்.கோபி, பி.கே.தனஞ்செயன், மு.பரமசிவம், நித்யா, (திருவண்ணாமலை)
யுவன் ஜான், நாகராஜ், பெருமாள், (கோவை)
ஜெகந்நாதன், பிலிப்ஸ் ஆரோக்கியதாஸ் (கடலூர்)
ஆகிய நிருபர்கள் நீக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**- நிர்வாக ஆசிரியர்**
(மக்கள் விசாரணை)


# மக்கள் விசாரணை (மாதஇதழ்)

## சந்தாதாரர் ஆக வேண்டுமா?

கீழ்கண்ட சந்தா படிவத்தை பூர்த்தி செய்து, தேவையான சந்தாவை குறிப்பிட்டுக் கிழே உள்ள விலாசத்துக்கு அனுப்பவும்.

### சந்தா படிவம்

பெயர் : ..........................................................................................

முழு முகவரி : ..........................................................................................

..........................................................................................

தொலைபேசி எண். : ..........................................................................................

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு சந்தா (தமிழ்நாடு) | ரூ. 110/- | ☐ |
| மூன்று ஆண்டு சந்தா (தமிழ்நாடு) | ரூ. 360/- | ☐ |
| ஓர் ஆண்டு சந்தா (வெளிநாடு) | ரூ. 1000/- | ☐ |

**MAKKAL VISARANAI, Current A/C. 14920200000953, IFSC Code IOBA0001492, Indian Overseas Bank, K.K. Nagar Branch** என்ற வங்கி கணக்கிற்கு பணம் செலுத்தி ரசீதை ஜெராக்ஸ் அனுப்பினால் போதுமானது.

மேலும் விபரங்களுக்கு

**மக்கள் விசாரணை** (மாத இதழ்)

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.

**Email : news@makkalvisaranai.com** போன் : 044 - 4354 2611, செல் : 93821 33334



Cell
98406 25822

# சங்கீதா ஸ்டீல்ஸ்

# SANGEETHA STEELS








எங்களிடம் டைல்ஸ் கட்டர்,
டிரில்லிங் மிஷின், ஏணி, பிரஷ்,
மண்வெட்டி, கடப்பாறை,
கிரைண்டிங் மிஷின், வெல்டிங் மிஷின்

**வாடகைக்கு கிடைக்கும்**



மிக்ஸி, கிரைண்டர், குக்கர், கேஸ் ஸ்டவ்
**சேல்ஸ் & சர்வீஸ்**

எண்.72, சாமி பண்டாரம் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.

# 7-ஆம் ஆண்டில் மக்கள் விசாரணை


























மக்கள் விசாரணை மாதஇதழின் 7-ம் ஆண்டு நிருபர்கள் ஆலோசனைக் கூட்டம் 24-12-2017 அன்று சென்னை, விருகம்பாக்கம் ஹோட்டல் டால்பின் பார்க்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஆசிரியர் முனைவர் ஆ. மவுரியன் அவர்கள் நிருபர்களுக்கு ஆலோசனை வழங்கினார். நிருபர்களும் தங்களின் ஆலோசனைகளையும் கருத்துகளையும் தெரிவித்தனர். பிறகு நிகழ்ச்சியில் தேர்வு செய்யப்பட்ட செய்தியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. அதுசமயம் முனைவர் ஆ. மவுரியன் எழுதிய நேர்முரண் நாவல் வெளியிடப்பட்டது.




# பண நாயகன்(ன்)ம்

தேர்தல் நாயகன் காலம் மாறி
தேள் நாயகமாக மாறிவிட்டது.
தேசத்தை பண முதலைகள்
விழுங்கப் பார்க்கிறது
ஆதிக்க சக்திகள்
எதையோ செய்து
மடக்கப் பார்க்கிறது - நாம்
ராமாபுரத்தை பார்த்திருக்கிறோம்
கோபாலபுரத்தைப் பார்த்திருக்கிறோம்
தைலாபுரத்தைப் பார்த்திருக்கிறோம்
புதிதாக
ஹவாலாபுரத்தை இப்பதான்
பார்த்திருக்கிறோம்.
மண்ணைக் கவ்விய திராவிடம்.
மானம்போன தேர்தல் ஆணையம்.
இனி பணநாயகம்தான்
நாட்டை ஆளும்.
சந்தர்ப்பவாதிகளின் கூடாரமாக
தமிழகம் மாறிவிட்டது.
முசொலினியின் பிடியில்
சிக்கிக் கொண்ட நாட்டை
இனி யார்தான் காப்பாற்றுவது
மனித சக்தி மாண்டுபோன பின்பு
மக்கள் ஆட்சி இனி தழைக்காது.
மாய உலகில் அதர்மத்தை அழிக்க
மாயவன் வருவான் என்று மாந்தர்கள்
பேசிய சத்திய சொல்
சாத்தியமானால் பணநாயகம்
வீழ்ந்து ஜனநாயகம்
மீண்டும் மலரும்.

**- கவிஞர் நிவேதிதா**

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S.Ali Mohammad Syeed, at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor. **A. MOURIYAN,**

# தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்
# சென்னை எழும்பூர் அரசு கண் மருத்துவமனை

## இணைந்து நடத்திய சிறப்பு இலவச கண் சிகிச்சை முகாம்






10-12-2017 அன்று காஞ்சிபுரம் படூர், ஆர்.வி.கே. இல்லத்தில்
மாநில துணைத் தலைவர் K.பாலாஜி தலைமையில்
கண் சிகிச்சை, பல் மற்றும் உடல் பரிசோதனை முகாம் நடைபெற்றது.
மாநில தலைவர் முனைவர் காசி அரங்கநாதன் மாநில பொதுச் செயலாளர் முனைவர் ஆ.மவுரியன்,
ஆகியோர் முன்னிலை வகித்தனர். RNI இணை இயக்குனர் I.விஜயன் முகாமினை துவக்கி வைத்தார்.
உடன் மாநில துணை தலைவர் V.அருணாச்சலம், மாநில துணை செயலாளர் V. யுவராஜ் ஆகியோர்
உடனிருந்தனர். முகாமில் 700க்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு பயனடைந்தனர்.



MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month

பக்தி, முக்தி மேலும் சக்தியின் உருவம் தான் கோமாதா!



**தானத்தில் சிறந்த தானம் பசுவிற்கு செய்யும் அன்னதானம் மட்டுமே!**

# தனக்கென வாழாது நமக்கென வாழும் பசுக்களுக்கு புத்தாண்டு, மாட்டுப் பொங்கல்,

## தங்களின் பிறந்த நாள், திருமண நாள், முன்னோர்களின் நினைவு நாள் மற்றும் தாங்கள் விரும்பும் நாட்களில் உணவளித்து மகிழுங்கள்!

கோமாதாவின் பேரருளால் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தினருக்கும் அனைத்து செல்வங்களும் கிடைத்திட மனதார பிரார்த்திக்கின்றோம். கடவுளின் படைப்பில் அவனுக்கு நிகரான படைப்பு என்றால், அது பசு மட்டும்தான். நமக்கு எல்லாவிதமான நன்மைகளையும், பயன்களையும் அளிக்கக்கூடிய சக்தி கோமாதாவில் மட்டும்தான் அடங்கி உள்ளது. இப்படி தனக்கென வாழாத பசுக்கள் இரக்கமின்றி கொல்லப்படுவதை தடுக்க காஞ்சி மகாப் பெரியவா ஆசியோடு பசுமடம் என்ற காப்பகத்தை ஏற்படுத்தி கடந்த 18 ஆண்டுகளாக 120 பசுக்களுக்கு மேல் பராமரித்து வருகிறோம். கோயில்கள் மற்றும் மாட்டுச் சந்தைகளில் ஏலம் விடப்படும் வயதான பசுக்களை பெற்றும், கசாப்புக் கடைகளுக்கு செல்லும் பசுக்களை வாங்கியும் பராமரித்து வருகிறோம். இப்பசுக்களைப் பாதுகாக்க புத்தாண்டு, பொங்கல் மற்றும் தாங்கள் விரும்பும் நாட்களில் தங்களால் முடிந்த நன்கொடைகளை தீவனம், பராமரிப்பு மற்றும் மருத்துவ செலவிற்கு வழங்கி, இப்புனிதப் பணியான கோ-சேவையில் தங்களையும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுகிறோம். தாங்கள் கோமாதாவிற்கு செய்யும் சேவை தங்களின் மாத்ரு, பித்ருக்களுக்கு செய்யும் சேவையாகும். பசுமடத்தை பார்வையிட்ட பின்னும் நீங்கள் உதவி செய்யலாம். பசுக்களை இறுதி காலம் வரை நிம்மதியாகவும், சுகமாகவும் வாழ வைப்பதும், பசுவதையை தடுத்து நிறுத்துவதும், மேலும், பசு வளர்ப்பின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுமே எங்களின் முக்கிய நோக்கமாகும். **பசுமடத்தில் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமையன்று 108 பசுக்களுக்கு பாராயணத்துடன் கோபூஜை வெகு சிறப்பாக நடைபெறுகிறது.**

**பசுமடத்தில் உள்ள வயதான, ஆதரவற்ற, ஊனமுற்ற, நோயுற்ற பசுக்களை பாதுகாத்து பராமரிக்க...**

ஒரு பசுவை பராமரிக்க ஒரு வாரத்திற்கு **ரூ.200** அனுப்புவோருக்கு **கோபூஜை செய்த கோமாதா யந்திரம்** அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை பராமரிக்க ஒரு மாதத்திற்கு **ரூ.650** அனுப்புவோருக்கு **பித்தளையிலான பெருமாள் விளக்கு** அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை பராமரிக்க இரண்டு மாதத்திற்கு **ரூ.1,200** அனுப்புவோருக்கு **பித்தளையிலான லெட்சுமி குபேர விளக்கு** அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை பராமரிக்க ஆறு மாதத்திற்கு **ரூ.3,750** அனுப்புவோருக்கு **வெள்ளியிலான ஸ்ரீஅன்னபூரணி விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் வெல்லம் செலவு **ரூ.500** அனுப்புவோருக்கு **பித்தளையிலான அஷ்டலெஷ்மி விளக்கு** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் புல் செலவு **ரூ.800** அனுப்புவோருக்கு **பித்தளையிலான சிவன்-பார்வதி விளக்கு** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் வைக்கோல் செலவு **ரூ.1,250** அனுப்புவோருக்கு **பித்தளையிலான ஸ்ரீஅன்னபூரணி விக்ரஹம், யந்திரம்** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் தீவனச் செலவு **ரூ.2,600** அனுப்புவோருக்கு **வெள்ளியிலான கோமாதா விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு மாத மருத்துவச் செலவு **ரூ.2,900** அனுப்புவோருக்கு **வெள்ளியிலான துளசி மாடம்** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு மாத அகத்தி கீரை செலவு **ரூ.4,300** அனுப்புவோருக்கு **வெள்ளியிலான தவழும் கண்ணன்** அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து பராமரிக்க **ரூ.6,600** அனுப்புவோருக்கு **ஒரிஜினல் வலம்புரி சங்கு** அனுப்பி வைக்கப்படும்

**குடும்பம் வாழையடி வாழையாக மகத்தான செல்வச் செழிப்புடனும், மகிழ்ச்சியுடனும் திகழ கோதானம் செய்வீர்!**

தாங்கள் விரும்பும் நாட்களில் **நாட்டுப் பசுவும் கன்றும் கோதானம் செய்ய ரூ. 12,500/-.** கோதானம் செய்தால்... ஜாதக ரீதியான தோஷம், செய்வினை தோஷம், பித்ரு தோஷம், திருஷ்டி தோஷம், பூர்வ ஜென்ம தோஷம், களத்திர தோஷம், பிரம்மஹத்தி தோஷம், நாகதோஷம் போன்ற 16 வகை தோஷங்கள் முற்றிலும் விலகும். மேலும் தீர்க்க சுமங்கலி பாக்கியம் கிடைக்கவும், கணவன்-மனைவி ஒற்றுமை நிலைக்கவும், புத்ர பாக்கியம் உண்டாகவும், தெய்வீக சக்திகள் பாதுகாப்புடன் சுகப்பிரசவம் நடைபெறவும், தடைப்பட்ட திருமணம் கைகூடவும் கோதானம் செய்வீர். கோதானம் செய்பவர்களுக்கு வெள்ளியிலான சிவன் பார்வதி விளக்கும், பித்தளையிலான கோமாதா மற்றும் மதுரா கிருஷ்ணர் விக்ரஹமும் அனுப்பி வைக்கப்படும்.



பசுமடத்தில் நடைபெறும் கோதானம்




பசுமடத்தில் நடைபெறும் ரிஷபதானம்

**அனைத்து துன்பங்களும், துயரங்களும் நீங்கி நீண்ட ஆயுள் பெற காளைகன்று தானம் (ரிஷபதானம்) செய்வீர்!**

தாங்கள் விரும்பும் நாட்களில் **காளைகன்று தானம் (ரிஷபதானம்) செய்ய ரூ. 5,000/-.** ரிஷபதானம் செய்தால்... அனைத்து தடைகளும் நீங்கி பெரும் நஷ்டங்கள் மற்றும் சங்கடங்கள் விலகும், வியாபார தடைகள் அகல, வாகன விபத்தை தவிர்க்க, தடை இன்றி தன வரவு மற்றும் காரிய வெற்றி பெற, தோல்விகள் அகல வெற்றிகள் குவிய, ராஜயோகம் அடைய, கற்ற கல்வியும் தேடிய செல்வமும் என்றும் நிலைத்திருக்க காளைகன்று தானம் செய்வீர். ரிஷபதானம் செய்பவர்களுக்கு வெள்ளியிலான காமதேனு விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்.

**மாட்டுத் தொழுவத்தில் நடைபெறும் நமது கஷ்டங்களை போக்கி இஷ்டங்களை கொடுக்கும் தேவதைகள் குடிகொள்ளும் கோடி தீப ஆராதனை!**

தங்களது இல்லங்களில் அமைதியும் ஆனந்தமும் நல்வாழ்வும், முன்னோர்கள், குல தெய்வ ஆசி வேண்டியும் மாட்டுத் தொழுவத்தில் கோடி தீபங்கள் ஏற்றி வழிபாடு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தங்களின் முன்னோர்கள் நினைவாக அல்லது தங்களின் பிரார்த்தனைக்கேற்ப தாங்கள் விரும்பும் தேதியில் பசுமடத்தில் உள்ள மாட்டுத் தொழுவத்தில் கோமாதாவிடம் பிரார்த்தனை செய்து தேவதைகள் குடிகொள்ளும் தீபம் தீப ஸ்தம்பத்தின் மீது ஏற்றப்படும். ஒரு நாள் தீபம் ஏற்றி வழிபட ரூ. 300 அனுப்புபவர்களுக்கு பித்தளையிலான பசுவும் கன்றும் உள்ள விளக்கும், பிரசாதமும் அனுப்பி வைக்கப்படும். இதில் அனைவரும் கலந்து கொண்டு வாழ்வில் ஒளி பெறுவோம்.



மாட்டுத்தொழுவத்தில் நடைபெறும் கோடி தீப ஆராதனை



**குடும்ப சந்தோஷத்தின் திறவுகோலான வலம்புரி சங்கு அதிர்ஷ்டத்தை உண்டாக்கி வாழ்வை வளமாக்கும். மன இருளையும் வாழ்க்கை இருளையும் அகற்றி தங்கள் வாழ்வை பிரகாசமாக்கி சீரும் சிறப்புமாய் வாழவைப்பதும் வலம்புரி சங்கே!**

வாழ்வில் நல்ல துணையை பெறவும், பிரிந்தவர்கள் ஒன்று சேரவும், மாணவர்களின் கல்வியறிவு பெருகவும், அடிக்கடி வரும் நோய்களை தடுக்கவும், வீடு மற்றும் வியாபார ஸ்தலத்தில் கண் திஷ்டி நீங்கவும், வாடிக்கையாளர்களை ஈர்க்கும் சக்தி கிடைக்கவும், ரியல் எஸ்டேட் மற்றும் பங்கு வியாபாரத்தில் யோகம் பெறவும், சொந்த வீடு வாங்கவும், பூர்வீக சொத்துக்கள் நிலைக்கவும், வாஸ்து குறைகள் நீங்கவும், கடன் பிரச்சனைகள் தீரவும், குடிப்பழக்கம், தீயபழக்கம், தீயசக்தியை நெருங்க விடாமல் தடுக்கவும் ஒரு பசுவை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து பராமரிக்க ரூ.6,600 அனுப்புவோருக்கு பசுவிற்கு அபிஷேகம் செய்யப்பட்ட மணக்கவலை மற்றும் ஒரிஜினல் வலம்புரி சங்கு ஒன்று அனுப்பி வைக்கப்படும்.

**தாங்கள் விரும்பும் நாட்களில் தங்கள் சார்பாக கோபூஜை, கோதானம், சங்கு பூஜை, தீப ஆராதனை செய்து தங்கள் சார்பாக அனைத்து பசுக்களுக்கும் அன்னதானம் வழங்கப்படும்**

**நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் ஒரு வருடத்திற்கான ரூ.365 ஐ கோமாதாவின் பராமரிப்பிற்கு அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான கோமாதா டாலர் மற்றும் கோமாதாவின் வண்ணப்படம் அனுப்பி வைக்கப்படும்**

பசுவின் ஆகாரத்திற்கும், கோதானத்திற்கும், கோடி தீப ஆராதனைக்கும், வலம்புரி சங்கிற்கும் நன்கொடையை **CHEQUE/DD/MO** ஆக **SHRI GHOSALA SEVA TRUST, CHENNAI** என்ற பெயரில், கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பும் போது தங்களின் பெயர், கோத்திரம், நட்சத்திரம், முகவரி, தொலைபேசி எண்ணை தெளிவாக குறிப்பிட வேண்டுகிறோம். நன்கொடை அனுப்புவோருக்கு பிரசாதங்களும், பூஜிக்கப்பட்ட மேற்கண்ட பொருட்களும் மற்றும் சுத்தமான நாட்டு பசுஞ்சாணத்தில் சைவ முறைப்படி பசுமடத்தில் விராஜ ஹோமம் செய்து தயாரிக்கப்பட்ட விபூதியும் அனுப்பி வைக்கப்படும்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வரி விலக்கு உண்டு

# பசுமடம்

(RECOGNISED BY ANIMAL WELFARE BOARD OF INDIA)

வயதான, ஊனமுற்ற, நோயுற்ற, ஆதரவற்ற பசுக்களை சுதந்திரமாக பாதுகாத்து பராமரிக்கும் இல்லம்

**பெருமாளகரம், திருவேற்காடு (PO), சென்னை-77.**

**OFF: 8754 555 555, MADAM: 8754 666 666 | www.shrigosala.com**



பசு மடத்தில் உள்ள வயதான பசுக்கள்